தென்மொழி

# மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்!

மூச்சுள்ள வரைக்கும் உலகத் தமிழின
முன்னேற்றம் ஒன்றே பேசுவேன்! — அதில்
ஏச்சுகள் பேச்சுகள் ஆயிரம் வரினும்
எதிர்நின் றிருகை வீசுவேன்!

காசுள்ள வரைக்கும் கையுள்ள வரைக்கும்
கவின்தமிழ் ஒன்றே பரப்புவேன்! — இதை
மாசுள்ளம் கொண்டே மதித்திடார் செயல்களை
மண்மே டிட்டே நிரப்புவேன்!

காலுள்ள வரைக்கும் கருத்துள்ள வரைக்கும்
காடுமே டெல்லாம் முழக்குவேன்! — என்
மேலுள்ள அன்பால் எனைப்பற்று வோர்க்கும்
மேலும்மேல் அவ்வினை பழக்குவேன்!

உயிருள்ள வரைக்கும் உடலுள்ள வரைக்கும்
ஒவ்வோர் அணுவிலும் தமிழ்மணம்! — அவை
அயர்வுற்று மறையினும் ஆழ்வெளி பரவினும்
அங்கங்கும் கிளர்ந்தெழும் தமிழினம்!

வடி : 18
ஒலி : 12
ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்
விலை
உருபா 1-25

www.thamizham.net - Free E book No 7523

# நமக்கு வந்த மடல்கள்


**0 : 938 :** பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தாங்கள் இரவும் பகலும் பாராது — சிறிதும் ஓய்வின்றித் தமிழின் - தமிழ் மக்களின் நலத்தையே உயிராய்க் கொண்டு உழைப்பதைப் பார்த்துத் தங்களுக்காக நன்றி சொல்பவர்களில் நானும் ஒருவன். நீண்ட நாட்களாகத் தமிழ்ச்சிட்டு அன்பனாக இருக்கும் நான் இப்பொழுது படைத் துறையில் பணியாற்றி வருகிறேன்.

படைத்துறையில் சேர்ந்தபொழுது, தமிழன் என்பதால் தொடக்கத்தில் இந்தி வெறியர்களிடம் நான் பட்ட துன்பங்களை எண்ணிப் பார்க்கிறேன். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் தம்மைப் பரந்த நோக்கு உடையவராகக் கருதிக் கொண்டு 'தென்மொழி' அன்பர்களைத் "தமிழ் வெறியர்கள்" என்று கூறும் கூற்றினை நான் ஒப்பிட்டுப் பார்த்தேன். இதனை நம் அன்பர்கள் உணரும் பொருட்டே எழுதலுற்றேன். அன்று உலகமே வியக்கும் வண்ணம் வீரச்செயல் செய்தவர்கள் தமிழர்கள். வீரக் குடிமரபில் வந்த நாம் இன்று படைத்துறையில் மிகக் குறைவாக இருக்கின்றோம். இதற்குக் காரணம் என்ன ? 'இந்தி' தான்?

படைத்துறையில அதிக முயற்சி எடுத்துச் சேர்ந்தாலும், உள்ளே சென்றவுடன், கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. 'தமிழன்' என்று சொன்னாலே ஒருவகை ஏளனப் புன்னகையோடு பார்க்கின்றனர். எதைச் சொன்னாலும் இந்தியிலேயே சொல்வதால் நம்மால் எதையும் சரியாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதனால் அந்த வேலையைச் சரியாகச் செய்ய முடிவதில்லை. இதைக் கூடச் செய்யத் தெரியாத நீ "இங்கு எதற்கு வந்தாய் ?" எனத் திட்டித், தண்டனையும் கொடுக்கின்றனர். கடுந்தண்டனையைத் தாங்கவியலாத பல தமிழ் இளைஞர்கள் பயிற்சியிலேயே ஓடி வந்து விடுகின்றனர். நம் தேவைகளை அவர்களுக்கு உணர்த்த ஆங்கிலத்தில் சொன்னால் மேற் பதவியிலுள்ள சில "இந்தி வெறியன்"கள் நம்மை அடிக்கக் கூட வருகின்றனர். பிறகு நமக்குத் தேவையானவற்றைப் பெறுவது எப்படி? இந்தி தெரியாத ஒரே காரணத்தால், தேவைகள் பலவற்றை இழக்கிறோம். நாம் அவர்களை விட அறிவு உள்ளவர்களாக இருந்தாலும், கருத்துகளை அவர்களுக்கு இந்தியில் சொல்லத் தெரியாத காரணத்தால் "முட்டாள்கள்" ஆக்கப் படுகின்றோம். படைத் துறையில் சென்றவுடன், இந்தியில் ஒரு தேர்வில் தேர்ச்சி அடையும் வரை விடுமுறையே அளிக்கப் படுவதில்லை. இந்தியைச் சிறிதும் அறியாத நம்மவர்கள், சேர்ந்தவுடன் இந்தித் தேர்வில் தேர்ச்சி அடைய முடியுமா? படைத்துறையில் "சர்தார்கள்" எனப்படும் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களுக்குப் படைத்துறைச் சட்டங்களில் இருந்து பல நெறி விலக்குகள் அளிக்கப் படுகின்றன. ஆனால் நமக்கு ஒரு சிறிய சலுகையும் கிடையாதே. — பல வழிகளிலும் தமிழன் ஏமாற்றப் படுகின்றான். இளித்தவாயன் ஆக்கப் படுகிறான்.


(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E book No 7523



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

*[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]*



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

*இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.*


பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழிமறை. நித்தலின்பனார், தென்மொழி ந. முத்துக்குமரனார் தென்மொழி ப. துரையரசன், தென்மொழி. நா. இளமாறன்.

அமைச்சர் : அழ. இளமுருகன், அறி. இ

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 18] தி. பி. உ0கஙு கடகம் (சூலை-ஆகச்'82) [ஓலை: 12


# குமரிமுனையில் திருவள்ளுவர் சிலை!



அண்மையில், தென்மாவட்டங்களில், உலகத் தமிழின முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர்கள் அமர்த்தத் தொடர்பாகப் பத்து நாட்கள் சுற்றுச் செலவு மேற்கொண்ட பொழுது, குமரிமுனைக்கும் செல்ல நேர்ந்தது. அக்கால், குமரி மாவட்டத்தில் இயக்க அமைப்புத் தொடர்பாக, நாகர்கோயில், தங்கும் விடுதியில் நம்மைக் கண்டு பேசிய உள்ளூர் அன்பர்கள் சிலர் தெரிவித்த செய்தி, நமக்குப் பெரிய வருத்தத்தையும் மன அமைதியின்மையும் தந்தது. அச் செய்தி, கடந்த சில ஆண்டுகளுக்கு

www.thamizham.net - Free E book No 7523

முன்னர், குமரிமுனையில், கிழக்குக் கரையை யொட்டிய அழகிய ஒரு கருங்கற் பாறையில், விவேகானந்தர் சிலையும் எழில் கொழிக்கும் நினைவு மண்டபமும் அமைக்கப்பெற்றதை யொட்டித் தண்டமிழ்ப் பேராசானும், உலக முதல் மெய்ப்பொருளாசிரியரும் ஆகிய தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானுக்கும், அக் குமரி முனையில் அழகு நெடுஞ்சிலையும், அணிதிகழ் நினைவு மண்டபமும் கட்ட வேண்டும் என்று தமிழ்த் தலைவர்களிடையே மதர்த்து எழுந்த கோரிக்கை, அரசியல் பூசல்களுக்கும் ஆட்சி மாற்றப் புயல்களுக்கும் இடையில், படிப்படியாகக் கருக்கலைந்து போனது என்பதும், அதையொட்டிய பின்னணியுந்தாம் !

திருவள்ளுவருக்குக் குமரி முனையில் சிலையெழுப்புதல் வேண்டும் என்னும் கோரிக்கை முதன் முதல் திருவள்ளுவர் ஈராயிரமாவது ஆண்டில், கிளர்ந்தெழுந்த பொழுது, கலைஞர் கருணாநிதியின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அரசுத் தொடர்பாகவும் அக் கருத்து பேசப் பெற்றது; எழுதப் பெற்றது. அக்கால் (1978இல்) தவத்திரு. குன்றக்குடியடிகளார் சார்பில் திருச்சியில் நடைபெற்ற திருக்குறள் பேரவை மாநாட்டின் செயற்குழுக் கூட்டத்தில் குமரி முனையில் திருவள்ளுவரின் முழு உருவச் சிலையை நிறுவுதல் வேண்டும் என்ற தீர்மானம் உருப் பெற்று, அதை முறையாக அரசிடம் எடுத்துச் சொல்லிச் செயற்படுத்த,குமரி முனையில் திருவள்ளுவர் சிலையமைப்புக் குழு, என்பதாக ஒரு குழுவும் அமைக்கப் பெற்றது. அக் குழுவின் தலைவராகத் தவத்திரு. குன்றக்குடியடிகளாரும்,செயலராக நாமும் அமர்த்தப் பெற்றோம். ஆனால், அத் தீர்மானம் ஏனோ மாநாட்டில் நிறைவேற்றப் பெறவில்லை. அக் குழுவின் அமைப்பும் ஏனோ தவிர்ந்து போனது. அவ்வாறு அதற்கென அமைய விருந்த கட்டுக் கோப்பான ஓரமைப்பு தவிர்ந்து போனாலும்,அவ்வெண்ணம் தளர்ந்து போகாமல், அதன் முன்னும் பின்னும் வழக்கம் போல் நாம் பேசும் திருக்குறள் கூட்டங்களில் அக்கருத்து பற்றிப் பலகாலும் பேசினோம்; பேசிக் கொண்டும் வருகிறோம். அதுபோலவே தவத்திரு. அடிகளாரும் அவ்வப்பொழுது அக் கருத்தைப் பலவிடங்களிலும் வலியுறுத்திப் பேசி வந்துள்ளதாக அறிகிறோம். இவ்வாறு குமரி முனையில் அமைய வேண்டிய திருவள்ளுவர் சிலையமைப்புக் கருத்து இன்னும் முழு அளவில் வலியுறுத்தப் பெறுமலேயே இருந்து வருகிறது.

ஆனாலும், கலைஞர் காலத்திலேயே, இக் கருத்தை எவ்வாறேனும் செயலுக்குக் கொண்டு வந்து விட வேண்டும் எனும் எண்ணத்தில், கலைஞர் அவர்கள், இதற்கென ஓர் ஆய்வுக் குழுவும், திட்டக்குழுவும் அமைத்தார்கள் என்றும்,அக் குழுக்களும் தம் தம் குறிக்கோள்களின் படி, விவேகானந்தர் பாறைக்கு மேற்கே ஒரு பாறையைத் தேர்ந் தெடுத்துத் திருவள்ளுவர் சிலை யமைப்பதற்கான ஒரு திட்டத்தையும் வடிவப் படுத்திக் கொடுத்தன என்றும், ஆனால், அதன் பின்னர்

www.thamizham.net - Free E book No 7523

அமைந்த ம கோ. இரா. அவர்களின் ஆட்சி அத்திட்டத்தையே படிப் படியாக முடக்கி விட்ட தென்றும், பின்னர் ஒருகால் அத்திட்டம் பற்றி, நம் முதலமைச்சரிடம் நினைவூட்டப் பெற்ற பொழுது, 'நான் ஆட்சியில் இருக்கும் வரை, திருவள்ளுவர்க்குக் குமரிமுனையில், விவேகானந்தர் சிலைக்குப் போட்டியாக ஒரு சிலையமைப்பதை நடக்க விட மாட்டேன்' என்று அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்தாகவும், அதன் பின்னர் அது பற்றிய பேச்சே எழவில்லை என்றும், குமரி மாவட்டத்தில் மூத்த அன்பர்கள் சிலர் நம்மிடம் மிகுந்த வருத்தத் துடன் தெரிவித்தனர். அதன் பின்னரே நாம் குமரிமுனை சென்று, விவேகானந்தர் சிலையும் மண்டபமும் அமைந்த பாறையையும், திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்த பாறையையும் கண்டு வந்தோம்.

குமரிமுனையில், கிழக்குப் பகுதியில் விவேகானந்தர் சிலை அமைந்திருக்கும் பாறையே, அங்குத் தெற்கும் மேற்குமாக அமைந்து உள்ள மூன்று நான்கு பாறைகளிலும் அழகும் அகலமும் உயரமும் வாய்ந்ததாகும். மேலும் அப் பாறையே கடலைவிட்டு அரைக்கல் அளவில் விலகி நாற்புறமும் நீர் சூழ அமைந்த இயற்கை யெழில் வாய்ந்த பாறையாகும். அதுவே நம் தெய்வத் திருவள்ளுவரின் சிலையமைப்பதற்குப் பொருத்தமும், தகுதியும், அமைவும் சூழ்ந்த பாறையாகும். ஏனோ தெரியவில்லை, தமிழரின், வழக்கமான இளிச்ச வாய்த்தனத்தினால், அதில் விவேகானந்தர் பாறை அமைய விட்டுக் கொடுக்கப் பெற்று விட்டது. விவேகானந்தர் திருவள்ளுவரை விட எவ்வகையிலும் உயர்ந்தவருமல்லர்; அறிவு நிறைவுற்றவருமல்லர். ஆழ்ந்த மெய்ப்பொருளறிஞருமல்லர். அல்லது ஒரு பொது மக்கள் தொண்டருமல்லர். சமயச் சார்பான, அதுவும் இந்துமதச் சார்பான தகுதியைக் காட்டிலும் வேறு ஒரு தகுதி அவருக்கிருப்பதாக நாம் கருத வில்லை.

மற்றும், விவேகானந்தர் பாறைக்கு மேற்கே நிலப் பகுதியுள், காந்தியடிகளின் நினைவு மண்டபம் ஒன்று உள்ளது. அதன் முன்னால் ஆதிசங்கரரின் மடம் ஒன்றும், அதையடுத்து வடக்கே வேத பாட சாலை ஒன்றும் அமைந்துள்ளன. அவை தவிர, ஆரிய வளர்ச்சிக்கும் ஆளுமைக்கும் உரிய வகையில், வட நாட்டினரும் இந்து சமயத் தினரும் வேறு இடங்களையும் மடங்களையும் பிடித்துக் கொண்டு, தென் குமரி முனையையே, ஆரிய வல்லாண்மைக்குரிய ஒரு பகுதியாக ஆக்கிக் கொண்டுள்ளனர். இவற்றையெல்லாம் ஆழ நினைத்துப் பார்க்கையில் தமிழனின் எதிர்காலம் எங்கு இருண்டதாகப் போய் விடுமோ என்ற அச்சந்தான் மனத்தில் எழுகிறது.

ஒருமைப்பாடு என்னும் பெயரில் தமிழ் நாட்டை நடுவணரசு கொஞ்சங் கொஞ்சமாகப் பார்ப்பான ஆளுமைக்கு உட்படுத்தும் செயலே, இந்தியா குடியரசு நாடாக அமைந்ததிலிருந்து தொடர்ந்து

www.thamizham.net - Free E book No 7523

நடந்து வருகிறது. மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, பண்பாடு, கல்வி, தொழில் முதலிய அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு படிப்படியாக ஆரிய வல்லாண்மைக் குட்படுத்தப் பட்டு வருவதை உரிமைச் சிந்தனையுள்ள எவரும் மறுக்க முடியாது. இக் கால் குமரிமுனையைப் பார்க்கின்ற பொழுதோ அவ்வெண்ணம் பன் மடங்கு மேலோங்கி நிற்கிறது.

வடநாட்டுத் தலைவர்கள் சமயம், அரசியல், தேசியம் என்னும் பெயரால், தமிழக இன மேம்பாட்டுக்குழைத்த தலைவர்களை விட மேலாக்க் கொண்டாடப் பெறுவது கண் கூடாகத் தெரிகிறது. காந்தியின் உடற் சாம்பல் இருந்த குடம், குமரிமுனைக் கடலில் கலக்கப் படுவதற்கு முன், அது வைக்கப் பெற்றிருந்த இடமே இப் பொழுது காந்தி நினைவு மண்டபமாக உருப்பெற்றிருக்கின்றது என்பதை நினைக்கையில் மனம் குமுறுகின்றது. காந்தியடிகள் நமக்கு வேண்டாதவரல்லர். அவர் நம்முடைய மதிப்பிற்கும் உகந்த வரே. எனினும், குமரிமுனையில் உள்ள சிறுசிறு இடங்களையும் வட நாட்டுத் தலைவர்களின் நினைவுகளுக்காகவே ஒதுக்கிக் கொள்வது, அவ்வளவு பரந்த மனப்பான்மையன்று. தமிழின நலத்திற்காகவே இறுதிவரை உழைத்த, ஒப்பற்ற தலைவர் தந்தை **பெரியாரை** விடவும் உலகத்திற்கே நல்லறம் கூறிய இந்திய நாட்டின் மேம்பட்ட மெய் யறிவாளர் **திருவள்ளுவரை** விடவும், காந்தியும், விவேகானந்தரும் உயர்ந்த மதிப்பிடங்களைப் பெறுபவர்களல்லர். ஒரு திருவள்ளுவருக் கும், ஒரு பெரியாருக்கும் இத் தமிழகத்தின் தென்முனையில் நினை விடங்களும், புகழ் மண்டபங்களும் அமையவில்லையானால், தமிழகம் என்றென்றும் ஆரியத்தின் வேட்டைக் காடாகவேதான் அடிமைப் பட்டு இருக்கவேண்டியிருக்கும். சூடு, சுரணையும், தன்மானமும் அற்ற தமிழினத்திற்கு இந்த நிலை மிகவும் இழுக்கையே தருவதாகும்.

இனி, எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழக முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன், திருவள்ளுவரின் சிலை பற்றிக் கூறிய கருத்து, தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரின் நெஞ்சிலும் நெருப்பை வாரிக் கொட்டுவதாகும். விவேகானந்தர் சிலையும் நினைவு மண்டபமும் முழுக்க முழுக்க ஆர். எசு. எசின் முனைந்த முயற்சிகளின் விளைவு களே ஆகும் என்பதைக் குமரி மாவட்டத் தமிழர் ஒவ்வொருவரின் வாயுரை வழியாகவும் தெளியலாம். அந்த மண்டபம் கட்டுவதற்கு நம் முதலமைச்சரும் ஒரு பெருந்தொகை நல்கி, அதுபற்றி அம் மண்டபத்தில் உள்ள நன்கொடையாளர் பட்டியலில் தம் பெயர் பொறிக்கப் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆர். எசு. எசு.க் காரர்களைக் கேட்டுக் கொண்டதாகவும் அங்குள்ள மக்கள் பேசிக் கொள்கின்றார்கள். இச் செய்தி உண்மையாக இருக்குமானால், ஆர். எசு. எசு-டன் நம் முதலமைச்சர் எவ்வாறு கைகோத்துக் கொண்டிருக்கின்றார் என்பது பற்றி, நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது. அந்தத் தகாத உறவின் அடிப்படை உணர்வினால்தான்,

www.thamizham.net - Free E book No 7523

# செய்திகள்

## 1 மாறவர்மன் — திரிபுரசுந்தரி வாழ்க!

சென்ற 30-6-82 அறிவன் கிழமை, (சிதம்பரம்) வல்லம் படுகையில், தென்மொழியன்பர் செல்வன் **மாறவர்மனுக்கும்**, நெடுநாளைய தென்மொழியன்பர் உதியஞ்சேரன் (தனஞ்சயன்) அவர்களின் கொழுந்தி, செல்வி **திரிபுரசுந்தரிக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள் மருத்துவர் கனகசபை, இரா. கோடிலிங்கம், கு. இராசேந்திரன், க மு. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடக்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

'நான் ஆட்சியில் உள்ள வரைக்கும், திருவள்ளுவர் சிலை பற்றிய பேச்சுக்கே இடமில்லை, என்று பேசியிருக்கவும் முடியும். இந்த நிலை எத்துணை கொடுமையானது, அஞ்சத் தகுந்த எதிர்காலத்தை உள்ளடக்கியிருப்பது என்று, தமிழ் நலமும் தமிழர் இன மேம்பாடும் கருதும் அன்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம்.

தமிழ் நாட்டை ஆளும் முதலமைச்சர் ஒருவர் தமிழ்நாட்டுக்கே — தமிழினத்திற்கே—அச்சாணியாக விளங்கும் தலையாய மூதறிஞர் — தெய்வப் புலவர் ஒருவரின் — சிலையமைய எதிர்ப்புத் தெரிவிக்கும் மிகக் கொடுமை வாய்ந்த மனவுணர்வு, அனைத்துத் தமிழர் நலன்களிலும் நஞ்சு சேர்ப்பதாகும் அத்தகைய ஒருவர் தமிழகத்தை ஆள்வதற்கும் தகுதியில்லையென்பதே நம் கருத்தாகும். ஒன்றுமறியாத ஏழை மக்களைத் தம் கவர்ச்சிப் பேச்சுகளாலும் கரவான நடிப்பாலும் ஏமாற்றி, அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட மாமதத்தால்,'திருவள்ளுவரின் சிலையைக் குமரிமுனையில் வைப்பது என் ஆட்சியில் நடவாது' என்று முதலமைச்சர் மறைமுகமாக தம் ஆரிய நண்பர்கள் உவக்குமாறு கருததுக் கூறியிருக்கிறார். விவேகானந்தருக்கு இணையாக அங்குத் திருவள்ளுவர் சிலை அமையக் கூடாது என்பது இந்துமதப் பேயர்களின் கருத்தாக இருக்கலாம். அப் பேயர்களின் ஆட்டு விப்புக்குத் தாமும் ஆடுகின்ற முதலமைச்சரின் தருக்குணர்வை என்னென்று சொல்வது?

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகின்றோம். குமரிமுனையில் திருவள்ளுவர்க்கும் பெரியாருக்கும், அங்குள்ள விவேகானந்தர், காந்தி இவர்களின் சிலைகளையும் மண்டபங்களையும் விட மிகச் சிறந்த முறையில் சிலையும் மண்டபமும் எழுப்ப வேண்டும் என்பது தன்மானமும் இனமானமும் உள்ள தமிழர் ஒவ்வொருவரின் கோரிக்கையும் கொள்கையுமாகும். இவ் வேண்டுதல்கள் புறக்கணிக்கப்பெறுமானால் **உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்** இதற்காகக் கடுமையான போராட்டங்களை, மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரிகின்றோம்.

**—பெருஞ்சித்திரனார்**

www.thamizham.net - Free E book No 7523

கத்தில் திரு. வி. ஆர். கோவிந்தசாமி வரவேற்புரையும், இறுதியில் திரு. நாராயணன் நன்றியுரையும் கூறினார்கள்.

இத்திருமணத்தில் வியப்பும் அதிர்ச்சியும் தரத்தக்க ஒரு நிகழ்ச்சி நடந்ததாக ஒரு செய்தி வந்துள்ளது. அஃதாவது பாவலரேறு அவர்கள் இத் திருமணத்தை நிகழ்த்தி முடித்தவுடனேயே, ஊர் திரும்பி விட்டார்கள். அதன் பின்னர், மணமகள் வீட்டார் கருத்துக் கிணங்க, மீண்டும் பார்ப்பனர் ஒருவரைக் கொண்டு சடங்குகள் செய்து வைதீக முறையில் திருமணம் நடந்ததாக அச்செய்தி கூறு கிறது. இஃது உண்மையானால், நம் தமிழ் மக்களின் அறியாமையை எண்ணிப் பெரிதும் வருத்தமும் இரக்கமும் பட வேண்டியவர்களாக இருக்கிறோம். முழு மனமாற்றம் ஏற்படாமல், சீர்திருத்தத்தை மேலுக்கு ஒப்புக் கொள்ளும் இது போலும் நடவடிக்கைகள் பெரிதும் தவிர்க்கத் தக்கனவாகும்.

## உ. மணி — இராணி வாழ்க!

உறைத்த தென்மொழி அன்பரும், நெடுநாளைய தனித்தமிழ்க் கொள்கை ஈடுபாட்டாளரும், ஆலங்காயம் (வ. ஆ.) உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியருமாகிய புலவர். திரு. ந. அ. அண்ணாமலை அவர் களின் அளியர் செல்வன் **ம. மணி** அவர்களுக்கும், **ந. இராணி** அவர்களுக்கும், கடந்த ஆடவை உச (4-7-82) வியாழன் காலை 8 மணி அளவில், வ. ஆ. நத்தம் ஊரில், அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் திரு. **இ. அன்பழகன்** அவர்கள் தலைமையில், **பாவல ரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார். வரவேற்புரையைப் புலவர் திரு. ந. அண்ணாமலை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தித் திருவாளர்கள் மு. கோவிந்தசாமி, குமர. தன்னொளியான் க. மு., மா. செ. தமிழ்மணி ஆகியோர் நல்லுரை வழங்கினார்கள். திரு. அ. வையாபுரி நன்றி கூறினார்.

## ௩. காசிநாதன் — கண்ணகி வாழ்க!

கடந்த ஆடவை உரு (9-7-82) வெள்ளி காலை 8 30 மணி யளவில், செயங்கொண்டம் வட்டம், குவாகத்தில் நீண்ட நாளைய தென்மொழி அன்பரும், ஆழ்ந்த தனித்தமிழ்ப் பற்றுளரும், செந்துறை வட்டாரப் பள்ளி இயல் ஆய்வாளருமான திரு. **சா. தங்கராசு**, க. மு. அவர்களின் தங்கை செல்வி **கண்ணகிக்கும்**, செல்வன். **த காசி நாதன்** இல. இ. க்கும், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் நடந்தது. திருவாளர்கள் ந. கிருட்டிண மூர்த்தி. க. இ., கோ. தியாகராசன், கு. இராசேந்திரன், க. மு. ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

## 4. சென்னைத் தொலைக்காட்சி — மறைமலையடிகள் பிறந்த நாள்!

மறைமலையடிகள் பிறந்த நாளான, கடந்த 15-7-82 வியாழ னன்று சென்னைத் தொலைக் காட்சியில் இரவு 8-15 மணிக்கு நடை

www.thamizham.net - Free E book No 7523

பெற்ற வண்ணக் களஞ்சிய நிகழ்ச்சியில், 'மறை மலையடிகள் வாழ்க்கைக் குறிப்புகள்' என்னுந் தலைப்பில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் 10 நிமையம் உரையாற்றினார்கள். நிகழ்ச்சி சுருக்கமாகவும் நிறைவாகவும் அமைந்திருந்தது.

## ௫. சொல்லாய்வுக் கூட்டம் - சென்னை

வழக்கம்போல் சொல்லாய்வறிஞர் திரு. ப. அருளியின் சொல்லாய்வுக் கூட்டம், சென்ற மாதம் 18-7-82 ஞாயிறு மாலை 4 மணியளவில், சென்னை மார்சல் சாலையில் உள்ள, தமிழ், சமசுக்கிருதம் பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனக் கட்டிடத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இம்முறை பொறி, புரை, புழை, கொப்புளம், சும்மாடு, வளை ஆகிய ஆறு சொற்கள் ஆய்வு பெற்றன. ஆய்வுரை முன் கூட்டங்களைப் போலவே மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. தொகுப்புரை பர். பொன். கோதண்டராமன் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. அருளியின் சொல்லாய்வுத் திறனை நேரில் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் நோக்கத்துடன் வெளி மாவட்டங்களிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் அன்பர்களும் அறிஞர்களும் பலர் வந்திருந்தது குறிப்பிடத் தக்கது. அவர்கள் அனைவரும் வியந்து பாராட்டும் வண்ணம் நிகழ்ச்சி சிறப்புற அமைந்திருந்தது. இந் நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களுள் குறிப்பிடத்தக்கோர்: திருவாளர்கள் பேரா. நா. பாண்டுரங்கன், ஞானசம்பந்தனார், (முதல்வர் நடுவண் தொழில் நுட்பக்கல்லூரி.), கு. கிருட்டிணசாமி, (தி.க. தலைவர், சிதம்பரம்), புலவர் தமிழரசன் (சிதம்பரம்), மு. கோ. இராமன் (உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்), பேரா. இ. மறைமலை, ஓய்வுபெற்ற வருமானவரி அதிகாரியும், திருக்குறள் தொடர்வகுப்பு ஆசிரியரும் ஆகிய கண்ணன், புலியூர்க் கேசிகன், குடந்தை இராசகோபால், புலவர் வீரராகவன் பொறியியல் அறிஞர் ந. கருணாநிதி, அருட்பாவலர் அரங்க. சீனிவாசன் (ஆராய்ச்சி முனைவர்). பாவலர். த. கோவேந்தன், நா. மு. சுப்பிரமணியம் முதலியோர் ஆவர். நிகழ்ச்சி இறுதியில் தொகுப்புரையாளர் எழுப்பிய சில விளக்கங்களுக்குத் தலைவர் நிறைவுரை கூறி நிகழ்ச்சியை இனிது முடித்தார். நிகழ்ச்சித் தொடக்கத்தில் நிறுவன இயக்குநர் பர். ஆறு. அழகப்பனார் வரவேற்புரை கூறினார். வரும் திசம்பர் இறுதியில் இயக்குநர் உருசியா செல்வதை யொட்டி, சொல்லாய்வுக் கூட்டத் தொடரின் குறிக்கோளாகிய நூறு சொற்களை விரைந்து நிறைவு செய்தற் பொருட்டு, இனி, மாதம் இரண்டு நிகழ்ச்சிகளாக வைத்துக் கொள்வ தென்று தீர்மானிக்கப்பெற்றது. அதன்படி வரும் ஆகத்து மாதத்தில் 22-8-82-இல் ஒன்றும், 29 8-82-இல் ஒன்றுமாக, 6-ஆவது, 7-ஆவது தொடர் கூட்டங்கள் நடைபெறும். நிகழ்ச்சிகள் அந்த இரண்டு ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலை 10மணியளவில் தொடங்கும் என்பதை உள்ளூர் வெளியூர் அன்பர்கள் கவனத்தில் கொள்க!

www.thamizham.net - Free E book No 7523

# பிற செய்திகள்

## 1 தமிழ்ச் செல்வி-சீனு. அரிமாப்பாண்டியன் வாழ்க!

'சித்தனையாளன்' இதழாசிரியரும், சீரிய இன நலத் தொண்டரும், பெரியார் சமவுடைமைக் கழகத் தலைவரும், பொதுப்பணியில் ஈடுபட்டோர் பிறரெல்லாரும் அரிதாய்க் கடைப்பிடிக்கும் ஒழுக்கம், நேர்மை, உண்மை, உறுதிப்பாடு, பண்புடைமை, எளிமை, இனிமையாய்ப் பழகுதல், ஒறுத்திழிவு செய்வாரையும் பொறுத்தொழுகும் மாந்தச் சீர்மை, மெலிவினும் நலிவினும் வலிவுசோராச் செயலாண்மை முதலிய கொளற்கரிய இன்னறுங் குணங்களைக் கொண்ட மாண்பாளரும், தமிழின மேம்பாட்டிற்கும், பெரியார் வகுத்துக் கொடுத்த மக்கள் நலக் கொள்கைச் செயற்பாட்டிற்குமே தம் அரிய வாழ்வை ஒப்படைத்து, விளம்பரமற்ற உயரிய தொண்டாற்றும் பெரியாரின் பெறற்கரும் பெருந் தொண்டரும் ஆகிய மதிப்பிற்குரிய வே. ஆனைமுத்து—ஆ. சுசீலா ஆகியோரின் தலைச் செல்வியாகிய தமிழ்ச் செல்விக்கும், தென்மொழி மெய்த் தொண்டரும், உ.த.மு.க. வின் புதுவை மாநிலச் செயலாளரும் ஆகிய சீனு—அரிமாப் பாண்டியன் என்னும் சீனு—அரிகிருட்டிணனுக்கும், சென்ற ஆடவை உஎ (11-7-82) ஞாயிறு பிற்பகல் 4-30 மணியளவில், புதுவை, குபேர் திருமண நிலையத்தில், பெருந்தகை திரு. கே. கோவிந்தராசலு அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்த விழா சிறப்புற நடைபெற்றது. திருவாளர்கள், சேலம், க. சித்தையன், சேலம் கி. பச்சைமுத்து, கு. ம. சுப்பிரமணியன், அகி., மா. அய்யாசாமி க.மு. சொல்லாய்வறிஞர் ப. அருளி வணி.இ, தென்மொழி க. தமிழமல்லன். க.இ, மா. முத்துசாமி, து.மா. பெரியசாமி, ந. கணபதி, புலவர் சோ. சு. யுவராசன் க.மு, சி. ஆறுமுகம், ஆ. செ. தங்கவேலு, எசு.டி. விவேகி. பேரா. பெரியார்தாசன் க,மு., பேரா. பொற்கோ, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். வே. ஆனைமுத்து வரவேற்புரையும், வீ. பெருமாள் நன்றியுரையும் கூறினர். மணமக்கள் நலனும் வளனும் நன்கு வாய்க்கப் பெற்று, மொழி, இன, நாட்டுத் தொண்டாற்றிப் பெயரும் புகழும் கொண்டு நீடு வாழ நிறைந்த நெஞ்சுடன் தென்மொழி வாழ்த்துகிறது.

## உ. சாந்தி—சங்கரலிங்கம் வாழ்க!

நெடுநாளைய தென்மொழித் தொண்டரும், புரப்பாளரும் ஆகிய சிங்கை இறைவாணன் அவர்களின் மகள் செல்வி. சாந்திக்கும், செல்வன் சுந்தரலிங்கத்திற்கும், கடந்த ஆடவை 10, (24-6-82) வியாழன் காலை 8 மணியளவில், பட்டுக்கோட்டையில் திருமண விழா இனிதே நிறைவேறியது. மணவிழாச் சார்பில் தென்மொழிக்கு நன்கொடையாக உரு 50/— வரப்பெற்றோம். மணமக்கள் இருவரும் எல்லாம் வல்ல இறைப்பேரருளால், எல்லா நலன்களும் இனிதே பெற்று, மொழி, இன, நாட்டுத் தொண்டாற்றி, நெடிது வாழ நிறைந்த உளத்துடன் தென்மொழி வாழ்த்துகிறது.

---

**உ. த. மு. க. செய்திகள் — அடுத்த இதழில்!**

---

www.thamizham.net - Free E book No 7523

# அனைத்துலக மக்கள் உரிமைக் கழகம்

## விடுதலைப் புலிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம் எனக் கோரி

# இந்திய அரசிடம் வேண்டுகோள்!

(விடுதலைப் புலிகளை இலங்கை அரசிடம் ஒப்படைத்திட வேண்டாம்' என்னும் கோரிக்கையைப், பிரான்சிலுள்ள 'அனைத்துலக மக்கள் உரிமைக் கழகம்' இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்குக் கடந்த 27-6-82 அன்று ஒரு வேண்டுகோள் மடலை அனுப்பியிருக்கின்றது. அதுபற்றிய செய்தியையும் அவ் வேண்டுகோள் மடலின் படியையும், பாரிசிலுள்ள **'பிரான்சு தமிழர் இயக்கம்** நமக்கு அனுப்பி வைத்துள்ளது. அவ் வியக்கத்தின் மடலையும், அனைத்துலக மக்கள் உரிமைக் கழகத்தின் வேண்டுகோளையும் கீழே காணலாம்.)

பாரிசு. 15-7-1982.

அன்புடையீர்,

வணக்கம். சென்ற விடை மாதம் தமிழீழ விடுதலைப் போராளிகளைத் தமிழ் நாட்டுக் காவல் துறையினர் தளை செய்துள்ளார்கள். அந்தப் படியான ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டதற்காக நாம் மிகவும் மனம் வருந்துகிறோம். **தமிழீழ விடுதலைக்காகத் தாங்கள் ஆற்றும் பணி அளப்பரிய தாகும்; எம்மால் நுணுக்கமாகப் புரிந்து கொள்ளக் கூடியதுமாகும்.** விடுதலைப் போராளிகள் தளை (கைது) செய்யப் பட்டதும் அவர்களின் நடத்தை தொடர்பாகத் தங்கள் தாளிகை மூலம் வந்த அறிக்கையை எமது இயக்கம் மிகவும் கவனத்தில் எடுத்துள்ளது.

தொடர்ந்து விடுதலைப் போராளிகளை இலங்கை அரசிடம், இந்திய அரசு ஒப்படைத்திட வேண்டாம் எனத் தமிழ் நாட்டின் எல்லாக் கட்சிகளும் ஒருமனதான தீர்மானத்தை நிறைவேற்றி இந்திய நடுவண் அரசிடம் கையளித்ததை மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம். அத்துடன், தமிழ்நாட்டின் பல கட்சிகளின் தலைவர்கள் தலைமை யமைச்சர் இந்திராகாந்தியை நேரடியாகவே சந்தித்து அக் கோரிக்கையை வற்புறுத்தியது எமக்கு மிகவும் ஆறுதல் அளிக்கக் கூடிய செய்தியாகும்.

**தமிழ் மொழியினதும், ஈழத்தமிழர்களினதும் இன்னல்களைப் புரிந்து கொண்டவராகிய தாங்கள், தமிழீழ விடுதலைப் போராளிகளை இலங்கை அரசிடம் கையளிக்க வேண்டாம் என்பதற்காகத் தொடர்ந்து செயலாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.**

மேலும், விடுதலைப் போராளிகள் தளை செய்யப்பட்டதை யறிந்து, எமது இயக்கம், அவர்களை இலங்கையரசிடம் கையளிக்க

www.thamizham.net - Free E book No 7523

வேண்டாம் என்று இந்திய—நடுவண் அரசின் தலைமையமைச்சர் இந்திரா காந்தியைத் தொலைவரி ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டது. அதைத் தொடர்ந்து உலக ஒன்றிய நாடுகளின் (U.N.O) ஓர் உறுப்பான மக்கள் உரிமைகள் பேணும் பிரான்சுக் கிளையின் செயலாளரான திரு. கிறிச்கிடியன் ரோசுரக்கரைச் சந்தித்து, இலங்கைப் போராளிகளின் இக்கட்டான நிலைபற்றி விளங்கப் படுத்தியது. அவற்றை ஏற்றுக்கொண்ட திரு. ரோசுரக்கர் அவர்கள் இந்திரா காந்திக்கு, விடுதலைப் போராளிகளை இலங்கை அரசிடம் கையளிக்க வேண்டாம் எனக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

அக் கடிதத்தின் படியையும் அதன் ஆங்கில மொழி பெயர்ப்பையும் தங்கள் பார்வைக்காக இத்துடன் இணைத்திருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராளிகள் இந்திய மண்ணில் செய்த குற்றத்திற்காக, அவர்களின் வழக்கு மன்ற நடவடிக்கைகள் நிறைவு பெற்றபின், அவர்களை இந்திய அரசு, இலங்கை அரசிடம் ஒப்புக் கொடுக்காமல் பாதுகாத்துக் கொள்வீர்கள் என நம்புகின்றோம். மேலும், தமிழீழப் போராட்டத்திற்குத் தங்களது தொடர்ச்சியான ஆதரவைத் தந்து இலங்கைத் தமிழீழ மக்களை ஊக்கப்படுத்துவீர்கள் என நம்பிக் கொண்டு இக் கடிதத்தை முடிக்கிறேன்.

அ. அரம்பு. பாரிசு.

## INTERNATIONAL FEDERATION OF HUMAN RIGHTS LEAGUE

27, Rue Juan-Dolenu., Paris 74014

'Paris 25 June 1982'

M. Indira Gandhi
Prime Minister
New Delhi
India

M. Prime Minister,

Our organisation has been seased by the case of Mrs:

1. KADIRGAMAR UMAMAHESWARAN
   Alias MUHUNTHA,
2. VELUPPILAI PIRABAHARAN
   Alias KARICALAN,
3. RAGAVAN,
   Alias SIVAKUMAR,

www.thamizham.net - Free E book No 7523

4. JOTHEESWARAN,
Alias KANNAN,

5. SIVANESWARAN
Alias NIRANJAN,

who were arrested recently at Madras and who's extradition has been asked by the Government Sri Lanka.

Taking account of the numerous accusations of torturing which are directed against the Government of Sri Lanka, when ever the militant Tamils fighting for a separate state are concerned, our organisation must fear, if ever your government decided to hand over these 5 persons, that they would be submitted to inhuman and degrading treatments

Under these conditions our organisation must express you it's fear of such an decision.

I beg you to beleave, M. Prime Minister,

in my high consideration
Cristian ROSTOKER
Expert.

---

## அனைத்துத் தமிழர்க்கும் ஓர் வேண்டுகோள் !

தமிழகத்தில் தளைப்படுத்தப்பட்டுள்ள தமிழீழ விடுதலை வீரர்களுக்கு அரசியல் அடைக்கலம் தரும்படியும், அவர்கள் சிங்கள அரசிடம் ஒப்படைக்கப்படாமல் தமிழகத்திலேயே தங்கியிருக்கும்படியும் வேண்டுகோள் ஒன்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதி அல்லது தட்டச்சுச் செய்து அவற்றை நான்கு படிகள் எடுத்து, அந்நான்கு படிகளிலும், ஆங்காங்குள்ள தமிழர்களிடம் ஆயிரக்கணக்கில் கையொப்பங்கள் வாங்கி, அவற்றுள் ஒன்றை இந்தியத் தலைமையமைச்சர்க்கும்; மற்றொன்றை இந்திய அயலகத்துறை அமைச்சர்க்கும், மூன்றாவதைத் தமிழ் நாடு முதலமைச்சருக்கும் நான்காம் படியை 'முதல்வர், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சென்னை-5, தமிழ்நாடு' என்னும் முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம். இவ்வரும் பணியை இன்றே தொடங்குங்கள்! முழு வெற்றி பெறும் வரை தொடருங்கள்!!

சென்னை-5
5—6—82

அன்பன்
பெருஞ்சித்திரனார்

---

www.thamizham.net - Free E book No 7523

# வீரமணி தாக்கப்பட்டது குறித்துப் பெருஞ்சித்திரனார் அறிக்கை

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில், வெறியர்கள் சிலரால் தாக்கப்பட்ட செய்தி மிகவும் அதிர்ச்சி தந்தது. தாக்கியவர்கள் அ.தி.மு.க. வினர் என்று அறிந்தவுடன் அவ்வதிர்ச்சி இரட்டிப்பானது. தன்னைத்தானே அழித்துக் கொள்வதில் தமிழினத்தைப் போல், ஓர் இழிந்த இனத்தை இவ்வுலகில் வேறு எங்கும் காணவே முடியாது.

உண்மையான தமிழினத்தொண்டு செய்துவரும் ஒப்பற்ற தொண்டரும் தலைவரும் ஆகிய வீரமணி அவர்களைத் தமிழன் ஒருவன் தாக்குகிறான் என்றால், அவன் கட்டாயம் தமிழனாகவே இருக்க முடியாது. அவ்வாறின்றி அவன் தமிழனாக இருந்தால், அவன் உறுதியாகத் தமிழனுக்குப் பிறந்தவனாக இருக்கவே முடியாது.

தந்தை பெரியாருக்குப்பின், தமிழர்களின் திராவிட இனத்தின் நலத்துக்காகவே தம் முழுவாழ்க்கையையும் ஈடுபடுத்திக் கொண்டு முழுநேரமும் நம் இனத்தின் முன்னேற்றத்திற்காகவே அலுப்பும் சலிப்புமின்றி, அயராமல் அரும்பாடுபட்டுவரும் மதிப்பிற்குரிய தமிழினத் தளபதி வீரமணி அவர்களின் உயிர் பெரிதும் மதிக்கத் தகுந்ததும் விலைமதிப்பற்றதும் ஆகும். அவர் தொண்டு இக்காலத் தமிழனத்திற்குக் கட்டாயத் தேவையான ஒன்று. இந்நிலைகளைத் தெளிவாக அறியாத மூடர்களே அவர் தொண்டை மதியாமல் அவர்க்குத் தீங்கிழைக்க முன் வருவார்கள்.

அரசியல் களத்தில் எத்தனையோ அருவருப்புகளும் இழிவுகளும் அழிவுகளும் நேர்வதுண்டு. ஆனால் தமிழ்நாட்டு அரசியலில் கடந்த சில ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அரசியலில் குழப்பங்களும் குழிபறிப்புகளும் இழிவுகளும், அழிவுகளும் வேறு எக்காலத்திலும் வேறெங்கும் நடந்ததில்லை.

பகைவர்களும் செய்யத் துணியாத இக் கொடுஞ்செயலைத் தமிழர்களே செய்தார்கள் என்று நினைக்கையில் தமிழனம் இன்னும் தன்னுணர்வும் தன்னறிவும் பெறவில்லையே என்பதைப் உணர்த்திப் பெரு வருத்தம் உண்டாக்குகிறது.

அரசியல் நிலையில் எத்தனையோ கருத்து மோதல்கள், கொள்கைப் போர்கள் நடைபெறலாம். ஆனால் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் இலக்குகளுக்காகப் பாடுபடும் மனப்பக்குவமும் அரசியல் பண்பாடும் வளர்தல் வேண்டும். ஒருவரையொருவர் கீழ்த்தரமாகப் பேசிக் கொள்வதும் இழிவு உரைகளால் பழித்துரைப்பதும் கொள்கை வலிவற்றவர்களின்

www.thamizham.net - Free E book No 7523

செயல்களே ஆகும். அந்நிலை மிகமிக இழிவானது மாகும். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில், இவ் விழிவான தன்மைகள் நாளுக்கு நாள் மிகவும் கொடுமையான நிலைக்குப் போய்க் கொண்டிருப்பதும் மிகமிக வெறுக்கத்தக்கதும் கண்டிக்கத் தக்கதும் ஆகும்.

எப்படியோ இத்தகைய சில கொடுமைகளுக்கும், கிளர்ச்சிகளுக்கும் நடுவில், உண்மையான ஒரு நல்விளைவு உருவாகும் காலம் மிக அண்மையில் உள்ளது என்பதையே இவ் வன்முறைப் போக்குகள் தெரிவிக்கின்றன. ஆரவார அரசியல் கட்சிக்காரர்களின் இத்தகைய புன்செயல்களால், இதுவரை மிகவும் பொறுமையாக இருந்துவரும் பொதுமக்களும் நாட்டு நலம் கருதும் கொள்கை உணர்வுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களும் உண்மையான, மறுமலர்ச்சிப் போருக்குக் கிளர்ந்தெழவே செய்வர். அந்நிலை மிக விரைவில் ஏற்படும் என்பதையே இவ் விழிவான தாக்குதல்கள் உணர்த்துகின்றன.

வீரமணி ஒரு தனி மாந்தரல்லர். ஓர் இன எழுச்சியின் மொத்த வடிவம், எதிர்காலத் தமிழின மறுமலர்ச்சிக்கான முயற்சிகளின் முனைப்பு, அவர் உயிருக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள் நடைபெறத் தொடங்குவது தமிழகத்தில் ஒரு பெரும் புரட்சிக்கு வித்திடப் பெறுகிறது என்பதையே காட்டும்.

தமிழகத்தை ஆள்கின்ற கட்சித் தலைவர்கள் இவ்வகையில் முன்னறிவுடன் நடந்து கொள்வார்கள் என்றே நம்புகின்றோம். தங்களைத் தாங்களே இழிவுபடுத்தும் முயற்சியில் தமிழின மக்கள் இறங்குவார்களானால், அது தங்கள் அழிவுக்கே வழி வகுக்கும் என்று அனைவரும் அறிந்து கொள்வது நல்லது.

வீரமணியைத் தாக்க முயன்ற அறிவற்ற மூடர்களைக் கண்டுபிடித்துத் தகுந்த தண்டனை அளிக்கும் வகையில் காவல்துறையும் அரசும் தங்கள் நேர்மையான கடமைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதுடன், நாட்டு நலம், இனநலம் கருதும் தலைவர்களுக்குத் தக்க பாதுகாப்பும் தருதல் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். —**பெருஞ்சித்திரனார்.**

---


# தென்மொழி

தனித்தமிழில்வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 35 உருபா |
| அரையாண்டுக் கட்டணம் : | 8 ,, | 18 ,, | 18 ,, |
| தனியிதழ் : | 1-25 ,, | 3 ,, | 3 ,, |


www.thamizham.net - Free E book No 7523

# செந்தமிழன்பர் நூல்வெளியீட்டுக் குழுமம்

## அமைப்பு நிகழ்ச்சிச் சுருக்கம்

தனித்தமிழில் மொழி, இனம், நாட்டுத் தொடர்பாக எழுதப் பெற்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கருத்துகளை நூல்வடிவில் கொணர்ந்து, தமிழகமெங்கும், மேலும் உலகில் வாழும் தமிழர்களிடத்தும் தீவிரமாகப் பரப்பிட வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவையைக் கருதி, தென்மொழியுடன் தொடக்கக் காலம் முதல் நெருங்கிய தொடர்பு கொண்ட திரு. கோ. மு. பெருமாள், அவர்களும், மற்றும் பழனிச்சாமி (தொலைக்காட்சி நிலையம்) பேபி (அஞ்சலக ஊழியர்) பர். ஆறிறைவன், பூங்குன்றன், கண்ணன், ஆற்றலரசு ஆகியோரும் இவ்வாண்டு மார்ச்சு மாத இறுதியில் (சென்னை) தென்மொழியகத்தில் கூடி நூல்வெளியீட்டுக் குழுமம் ஒன்றினை உடன் தொடங்குவதென முடிவு செய்தனர். இதனைத் தொடர்ந்து அவர்கள் தென்மொழி அன்பர்கள் பலரிடத்தும், நேரிலும் மடல் வழியாகவும் தங்கள் கருத்துகளைத் தெரிவித்து ஆதரவு திரட்டினர்.

அதன் முடிவாக, சூலை மாதம் 10-ஆம் பக்கல் மேற்கண்ட அன்பர்கள், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைக் கலந்து கொண்டு, தென்மொழித் தொடர்புள்ள உறைத்த தமிழன்பர்கள் ஏறத் தாழ முப்பது பேர்களுக்கு, நூல் வெளியீட்டுக் குழும அமைப்புக் கூட்டத்திற்கு வருகை தருமாறு மடல்வழித் தெரிவித்தார்கள். அதற்கிணங்கத், தென்மொழியகத்தில் (சென்னை) 18-7-'82 ஞாயிறு காலை 9-30 மணியளவில் சென்னையிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் வந்திருந்த 26 பேர்கள் ஒருங்கு கூடிக் கலந்துரையாடினார்கள். நிகழ்ச்சிக்குப் பல்லடம் திரு. ஆறுமுகம் அவர்கள் தலைமைதாங்கினார்.

அதில் நூல்வெளியீட்டுக் குழுமம் அமைப்புத் தொடர்பாகப் பல வகையான கருத்துகள் தெரிவிக்கப் பெற்றன. அன்பர்களின் கருத்துப் பரிமாற்றத்திற்குப்பின் நூல் வெளியீட்டுக் குழு ஒரு வகையாக வடிவமைக்கப் பெற்றது. அதன்படி, முதற்கண் குழுவின் பெயர்த் தேர்வு நடந்தது. அன்பர்கள் தெரிவித்த ஒன்பது பெயர்களில் **'செந்தமிழன்பர் நூல் வெளியீட்டுக் குழுமம்'** என்ற பெயரே ஒரு மனமாகத் தெரிவு செய்யப்பெற்றது.

அதன்பின், நூல்வெளியீட்டுக் குழுமத்தின் நோக்கங்கள், நெறிமுறைகள், செயற்பாடுகள் குறித்து ஆய்வு நடந்தது. அதன் முடிவாக ஓரளவு பொதுவான நெறிமுறைகள் உருவாயின. அதையடுத்து, இக் குழு தனியார் குழுமமாகச் (Private Company) செயல் படுவது என்றும், இதில் வரையறுக்கப் பெற்ற ஐம்பது பங்காளர் களைச் சேர்ப்பது என்றும், பங்குத் தொகை உருபா 500/- என்றும், இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் குறைந்தது இரண்டு

www.thamizham.net - Free E book No 7523

பங்குகளை யாகிலும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மேலும் குழுமம் வெளியிட விருக்கும் பருவ இதழுக்கென 10/- உருபா ஆண்டுக் கட்டணம் செலுத்தும் பத்தாயிரம் உறுப்பினர்களைச் சேர்ப்பது என்றும், இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக ஐவர் கொண்ட இயக்குநர் குழு ஒன்றை அமைப்பது என்றும், முடிவு செய்யப் பெற்றன.

கூட்ட முடிவுகள் அறிவிக்கப் பெற்ற உடனே வருகை தந்தவர்கள் அனைவரும் ஒன்று — இரண்டு பங்குகளைப் பெற ஒப்புதல் தந்தது நிறைவாக இருந்தது. இயக்குநர் குழுவிற்கு ஆர்வமுடன் முன்னின்று செயல்பட எண்மர் விருப்பம் தெரிவித்தனர். இந் நூல் வெளியீட்டுக் குழுமம் தோன்றுவதற்கு அடிப்படையான நிலையில் முன்னின்று பாடாற்றிய திரு. கோ. மு. பெருமாள் அவர்கள் கூட்ட நாளன்று தவிர்க்க முடியாத நிலையில் வெளியூர் சென்றிருந்ததால் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் கருத்துப்படி அன்னார் ஓர் அமர்த்த இயக்குநராகவும் தெரிவு செய்யப் பெற்றார். எஞ்சியுள்ள நான்கு இடத்திற்கும் தேர்தல் வழி ஒப்போலை முறைப்படி நால்வர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். ஆக, இறுதியில் தேர்வு பெற்ற ஐந்து இயக்குநர்கள் பட்டியல் வருமாறு:-

1. திரு. மா. ஆறுமுகம் — பல்லடம்.
2. திரு. தென்மொழி ப. துரையரசன் — திருப்பூர்.
3. திரு. கோ. மு பெருமாள் — சென்னை.
4. திரு. இரா. பாவாணன் — புதுக்கோட்டை.
5. திரு. மா. பூங்குன்றன் — சென்னை.

இவ் வமைப்புக் கூட்டத்தின் தொடக்கத்தினின்றே உறுப்பினர்களின் முழுக்கருத்தும் வெளிப்படுமாறும், குழுமத்தின் வினைத்திறம் புலப்படுமாறும் நிகழ்ச்சிகளில் ஏதும் இடையீடு செய்யாமல் கவனித்துக் கொண்டு ஒதுங்கியிருந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் செயல் அமைப்புத் திறம் இங்குக் குறிப்பிடத் தக்கது. நூல் வெளியீட்டுக் குழுமச் செயற்பாடுகள் அடுத்த அறிக்கையில் இடம் பெறும்.

— செய்தி : செ. கண்ணன்.


# தமிழ் நாள்காட்டி

## உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு!

அழகிய தமிழ் எண்களுடன் தமிழ் மாதப் பக்கல்களும், தமிழ் திரிந்த நடைவழக்கு எண்களுடன் ஆங்கில மாதப் பக்கல்களும், ஒவ்வொரு மாதத் தாள்களிலும் தமிழ், தமிழினம், தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குரிய கொள்கை மொழிகளும் குறிக்கப் பெற்று வரும் திசம்பர் முதற்கிழமையிலேயே விற்பனைக்குக் கிடைக்கும்படி, அழகிய படத்துடன் கூடிய நாள் காட்டி வெளிவருகிறது.


www.thamizham.net - Free E book No 7523

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தவர்களும் பேரறிஞர் அண்ணா வழி வந்தவர்களும் தென்மொழி ஆதரவாளர்களில் பெரும் பங்கினர் என்பதை நீங்கள் மறந்து விடுவது உங்கள் வளர்ச்சிக்கு நல்லதன்று.

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாருக்கும் தமிழ் இனத் தலைவர் தந்தை பெரியார் அவர்களுக்கும் இருந்த நல் உறவை மனத்தில் வைத்துக் கொண்டு செயல்படுவது உங்களுக்கும் நல்லது தமிழகத்துக்கும் நல்லது. பார்ப்பனர்களை எதிப்பது எவ்வளவு இன்றியமையாததோ அதைவிட இன்றியமையாதது தமிழர்களைத் தழுவிக் கொள்ளுவது. இதை மறந்ததால்தான் தமிழினம் தொடர்ந்து துன்பப்படுகிறது இந்த வரலாற்று உண்மையைத் தங்களைப் போன்றவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். தென்மொழி இயக்கம் வளர்ந்து வலிமை பெற வேண்டும் என்ற ஆவலில் தான் சொல்ல வேண்டியதைச் சொல்லி இருக்கிறேன். அன்புடன்,

தென்மொழித் தோழன் சி. பி சர்வாதிகாரி, இரும்புலிக்குறிச்சி.

0 : அன்பின் ஐயா, சென்ற தென்மொழி இதழில் வெளியாகிய "அண்ணா விழுந்த சதுப்புக்குழியில் விழாதீர்கள்! கடந்த வரலாற்றிலிருந்து பாடம் பெறுங்கள்! நீங்கள் புதிய வரலாறு படையுங்கள்!" என்ற சிறப்பு மடலைப் பார்த்தேன்; படித்தேன்.

அடிமைத் துயில் கொள்ளும் இந்தத் தமிழினத்தின் மிடிமை அகற்றும் விடிவெள்ளியாக நீங்கள்தான் விளங்கப் போகிறீர்கள். இந்த ஏதிலித் தமிழகம் உங்கள் ஒருவரைத் தான் நம்பியிருக்கிறது. புகழ் என்னும் மயக்க மருந்திட்டுத் தமிழரைச்சாய்ப்பபதே பின் மாய்ப்பதே பார்ப்பனர்களின் பணி. அந்தப் புதைசேற்றில் அன்புகூர்ந்து சிக்கி விடாதீர்கள். பிறகு எங்களுக்கென்று யாருமில்லை.

முதலில் பார்ப்பனர் ஆ! ஆ! ஊ! ஊ! என்று புகழுரை பேசித் தங்கள் வலையில் ஈர்த்துப். பின் அரத்தத்தை அப்படியே உறிஞ்சிக் குடிப்பார்கள். நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை இது. எனவே விழிப்பாக இருங்கள். அடிமைக் குமுகாயம் என்றும் அடிமையாக இருந்ததில்லை. நாளை நமக்கு விடுதலை கிடைக்கத்தான் போகிறது; அது உங்களால் தான்.

"அந்த நன்னாள் விரைவில் வரும் விரைவில்வந் எம்மோர்
அரசமைத்த செய்தியினை முரசொலித்துக் காட்டும்!"

—மெய். அருள்மொழியன், கடல் மீன்வளம் முகவை.

---

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும், விரும்பும் அன்பர்கள், கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

— அமைச்சர்

www.thamizham.net - Free E book No 7523

தொடர்-2

# இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும்!

(சிந்தனைச் செம்மல் கு. ச. ஆனந்தன், வழக்குரைஞர், கோபி.)

## போராட்டங்கள் தரும் பாடம்

இந்தி பேசும் மாநிலத்தவர், "ஆட்சிமொழியைப் பரப்புதல்" என்ற பெயரால், கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் நயன்மைக்கும்-அப்பாற் பட்டுக் கூட, இந்தித் திணிப்பைத் தீவிரமாகச் செயற்படுத்தி வரு வதைச், சென்ற 54 ஆண்டுக் கால வரலாறு தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. "நேருவின் உறுதி மொழி" என்ற தெளிவற்ற காப்பு உரை இந்தித் தீவிரக்காரர்களின் நிலையான இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்துவதன்று. ஆட்சிமொழி இந்தியின் தடை இல்லா வளர்ச்சி காரணமாக இந்தி பேசும் மக்கள் அரசுத்துறையிலும், ஆளுமையிலும், பொருளியல், நயன்மைத் துறைகளிலும், அரசியல் துறைகளிலும், ஏன் அனைத்துப் புலங்களிலும்-தொடர்ந்து மேம்பாடு அடைந்து வருவது, வெள்ளிடைமலை. அதற்கு ஈடாகக், குறிப்பிட்ட சில துறைகளில் மட்டும் ஆங்கில நீட்டிப்பைப் பெற்றுக் கொண்ட இந்தி பேசா மாநிலத்தவர் தம் ஈகங்கள் மற்றும் போராட்டங்கள் மூலமாகச் சின்னஞ்சிறு சலுகைகளை மட்டும் அவ்வப்போது பெற்றுக் கொண்டுள்ளனர். தமக்குரிய மொழி உரிமையில்லாததால், தாழ் வடைகின்றனர். இவ்வாறு நடுவண் அரசின், "இந்திதான் ஆட்சி மொழி" என்ற புதைசேற்றில், இந்தி பேசா மாநில மக்கள் நிலையாகச் சிக்கித் தவித்து, விழிப்புணர்ச்சி பெறும்போது மட்டும், தத்தம்மொழி உரிமைக்காகப் போராடிக் கொண்டேயிருந்து, இறுதியில் அரசியல் மொழி, பொருளியல் மற்றும் பண்பாட்டுத் துறைகளில் மெல்ல மெல்ல அடிமைகளாகிக் கொண்டு வருகின்றனர். இந்த அவல நிலையைத் தமிழகத்தில் நிகழ்ந்த பல்வேறு இந்திப் போராட்டங்கள் செவ்வனே விளக்குகின்றன.

இந்தியா விடுதலை பெறுவதற்கும் 25 ஆண்டுகள் முன்பிருந்தே ஆங்கிலத்திற்கு மாறாக இந்தியை இந்தியாவின் "பொது மொழி யாக" (ராஷ்டிர பாஷா) ஆக்கிவிட வேண்டுமென்று பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பேராயக் கட்சி தனது செயன்முறைத் திட்டங் களில் ஒன்றாக இந்தியை ஏற்றுக் கொண்டது. வளமில்லாத ஒரு வட்டார மொழி, பொது மொழியாவதற்குத் தகுதி இல்லை, என எதிர்ப்புக்குரல் கொடுத்தது தமிழகம். விளைவு-தமிழகம் மொழி யுணர்வு பெற்றது. ஆனால் அதனைத் தேசியத் தலைவர்கள் மதிக்க வில்லை.

1937-இல் ஒன்பது மாநிலங்களில், பேராயக் கட்சி, (1935-ஆம் ஆண்டின் அரசுச் சட்டப்படி) ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டது. அக் கட்சியின் செயன்முறைத் திட்டமான இந்தியைத் தமிழகப் பாடத்திட்டத்தில் ஒரு கூறாக மூதறிஞர் இராசாசி அவர்கள் புகுத்தினார். 'கட்டாய இந்தி ஒழிக, என்ற போர் முழக்கம் தமிழகம்

www.thamizham.net - Free E book No.7523

முழுவதிலும் ஒரே குரலாக ஒலித்தது. சென்னைக் கடற்கரையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டில் **மறைமலையடிகளார், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு. வி. க., நாவலர் சோமசுந்தர பாரதியார்** மற்றும் பல முதறிஞர்கள் "இந்தித் திணிப்பை" ஒரு சேர எதிர்த்தார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியது. **அஞ்சா நெஞ்சன் அழகிரி, இராமாமிர்தத்தம்மையார்** மற்றும் 200 பேர் திருச்சியிலிருந்து சென்னை வரை, நயன்மைகேட்டு நெடுஞ் செலவு நடத்தினர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வெஞ்சிறையில் வாடினர். பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். **பேரறிஞர் அண்ணா** அவர்கள் 6 மாதக் கடுங்காவலால் துன்புற்றார். **தாளமுத்துவும், நடராசனும்** சிறைக்குள்ளே பிணமாக்கப்பட்டனர். விளைவு-பள்ளிப் பாடத் திட்டத்திலிருந்து கட்டாய இந்தி கைவிடப்பட்டது.இத்தனைக் கும், அன்று, அனைத்திந்தியா ஓர் அடிமைநாடு; விடுதலையின் ஒளிக் கீற்றல்கள் கூட இந்திய வானில் தென்படாத நேரம். என்றாலும் "இந்தித் திணிப்பு" தமிழகத்தை உலுக்கிவிட்டது; உயிர்களைக் குடித்தது; மக்களை வதைத்தது.

1948-ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்களின் அடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் தொடங்கியது. "பொதுமொழி" முயற்சி போய், 'பாடத்திட்டத் திணிப்பு' அழிந்து, "**ஆட்சிமொழி**" என்ற புதிய பேயுருவை, இந்தி எடுத்துக் கொண்டது. அதனைத் தடுக்க இயலாத இந்தி பேசா மாநிலத் தலைவர்கள் வேறு வழியின்றி, அரசமைப்பு அவையில், இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டனர். ஆனால் நடைமுறையில் செயற்படுத்தப்படுவதைப், பதினைந்து ஆண்டுகள் தள்ளிப் போடுவதற்காகத் தமது முழு வலிமையையும் தந்து போராடினர். தமிழகத்தில் இந்திப் பெயர்கள் தாங்கிய பலகைகள் அழிக்கப்பட்டன. **இப் போராட்டம் முதல் முறையாக இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுவதை எதிர்த்து நடந்த தமிழகப் போராட்டம்!** விளைவு-இந்தி, ஆட்சிமொழி ஆக்கப் பட்டாலும் நடைமுறையில் அது தள்ளிப் போடப் பட்டது; முற்றும் நீக்கப்படவில்லை.

ஆங்கிலத்திற்கு மாறாக இந்தி ஆட்சிமொழித் தகுதியோடு மீண்டும் வேகமாகவும் வலிவுடனும் நடைமுறைப் படுத்தப்பட்டது. அதனை எதிர்த்து 1965-ஆம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் புரட்சி எழுந்தது. விளைவு-இந்தி ஆட்சிமொழி என மீண்டும் உறுதியாயிற்று. ஆனால் நேருவின் உறுதிமொழி என்ற "திரிந்த சலுகை" (Distorted Concession) மட்டும் தரப்பட்டது. அஃது இந்தியுடன் குறிப்பிட்ட ஆங்கில நீட்டிப்பிற்கு வழிவகை செய்தது.

"தமிழகத்தில் இந்தி எதிர்ப்புக் குதிரை செத்து விட்டது" என்று தலைமை அமைச்சர் **மொரார்சி தேசாய்** அவர்கள் மீண்டும்

www.thamizham.net - Free E book No 7523.

முழங்கினர்; 1978-ஆம் ஆண்டின் விடுதலை நாளன்று அனைத்துக் கட்சிகளின் இந்தி எதிர்ப்பு மாநாடு, மானமிகு வீரமணி அவர்களின் முயற்சியால் சென்னையில் நடந்தது. "நேருவின் உறுதி மொழியை அரசமைப்பில் இடம் பெறச் செய்க" என்ற தீர்மானத்துடன், "இந்தி எதிர்ப்பு நொண்டிக் குதிரை",தமிழகத்தில் மீண்டும் உலா வந்தது.

1978-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்களில் திருச்சியில் கூடிய தி. மு. க. இந்தி எதிர்ப்பு மாநாட்டில் **"தமிழையும் ஆட்சிமொழியாக்கு"** என்ற புதிய கோரிக்கை வைக்கப்பட்டது. **விளைவு-முழுமையான இந்தி எதிர்ப்பு உணர்வு தேயவும் இல்லை; தழைத்தோங்கவும் இல்லை; மாறாகத் திசை திரும்பி, ஒரு தேக்கத்தையடைந்தது.**

1932-ஆம் ஆண்டில் திட்டக்குழுவால், இந்தி திட்டப் பொருளாக ஏற்கப்பட்டு விட்டது. விளைவு-வெகு கொடுமையானதாக இருக்கும். இருப்பினும், தமிழக மக்களுக்கு, இந்தி பற்றிய **'உண்மை நிலை'** இன்னும் ஏனோ முழுமையாக உணர்த்தப் படவில்லை.

சென்ற 52 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், வரலாற்று நிலையில் நமக்கு விளக்குவது என்ன ? 'இந்திய ஒருமைப்பாடு' என்ற பெயரால் தமிழகம் 'இந்தி' என்ற சுழல் நச்சு வட்டத்திற்குள் (Vicious Circle) நிலையாகச் சிக்கிக் கொண்டது. அதன் போராட்டங்கள், முழுப் பயனையும் தருவதில்லை; மாறாக அடிமை நாய்கள் குலைக்கும்போது எலும்புத் துண்டுகள் அவ்வப்போது தரப்படுவதைப் போல, வெறும் வலிவற்ற உறுதிமொழிகளும், சின்னஞ்சிறு சலுகைகளும் அவ்வப் போது தரப்பட்டன. முழுத்தீர்வு கிடைக்கவில்லை.

இன்று தமிழகத்தில் இரு பெரும் இறுதி வினாக்கள் தோன்றியுள்ளன.

1) **"இடைக்கால ஆங்கில நீட்டிப்பு ஏற்பாடுகளை** மறுத்தொதுக்கி, இந்திச் சிக்கலுக்கு முழுமையான-நிலையான-தீர்வைக் காண்பதா ?

2) அல்லது, இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால், இந்தி மொழியினருக்கு மெல்ல மெல்ல அடிமைப் படுவதைக் காட்டிலும், இந்தியை முழுமையான 'ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டு, இந்தி பேசும் மாநிலத் தவரோடு அனைத்துத் துறைகளிலும் போட்டியிட்டு முகாமையைப் பெறுவதா ? இவையிரண்டில் ஏதோ ஒன்றைத் தான் இனித் தமிழகம் ஏற்கமுடியும்.

## இறுதித் தீர்வு

1) 'Official Language' என்ற சொற்றொடருக்கு அரசியல் சட்டத்தில் இலக்கணமோ,'விளக்கமோ தரப்படவில்லை. அதற்குத்

www.thamizham.net - Free E.book No 7523

தமிழில் **'அலுவல் மொழி'** என்றுதான் பொருள். அரசுப் பணித் துறைச் செயல்களில்,அம்மொழி பயன்படுத்தப் படுவதால் ஆட்சியில் இயங்கும் மொழி என்ற பொருள் பட **"ஆட்சி மொழி"** என்று நாம் கூறுகிறோம்.

2) அரசமைப்பில் XVII ஆம் பகுதியில் 343-ஆம் பிரிவு.**'இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழி** (Official Language) **இந்தி'** எனக் கூறுகிறது. 'ஒன்றியம்' என்றும் அரசமைப்புச் சட்டத்தின்படி, குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர், நடுவண் அமைச்சரவை, அரசுத் தலைமை வழக்கறிஞர் (Attorney General) நடுவண் அரசின் நடவடிக்கைகள், நாடாளுமன்றம், அதன் அதிகாரிகளின் நடவடிக்கைகள், அதன் சட்டம் இயற்றும் அதிகாரங்கள், நடுவண் நயன்மைத் துறை, கட்டுப் பாட்டாளர் மற்றும் தணிக்கைத் தலைவர் மத்திய நடுவண் அதிகாரப் பட்டியலில் (Union List) நடுவண் அரசுக்குத் தரப்பட்டுள்ள 97 அதிகாரங்களில் இயங்கும் அனைத்து அமைப்புகள், ஆகியவற்றைக் குறிக்கும்.

இவற்றில் மாநில ஆட்சி மொழிகள், நாடாளுமன்றச் சட்டங்கள், மாநிலச் சட்டங்கள், நாடாளுமன்ற நடவடிக்கைகள், தலைமை அறமன்றம், உயரற மன்றங்கள், மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகள், மாநில-நடுவண் அரசுகளுக்கிடையிலான தொடர்புகள் ஆகியவைகளில் பயன்படுத்தப்பட வேண்டிய மொழி பற்றி அரசமைப்பின் தனிப் பிரிவுகள் குறிப்பிடுகின்றன. **அவை நீங்கலாக மேற்சொன்ன ஒன்றியத்தின், அனைத்து அமைப்புகளிலும். நடுவண் அரசுத் துறைகளிலும், வணிகக் கழகங்களிலும், கூட்டாளுமங்களிலும்** (Corporations) **பயன்படுத்தப்பட வேண்டிய மொழியே, ஆட்சி மொழியாகும்.** ஆங்கில நீட்டிப்பு வரையறைகளை ஆட்சிமொழிகள் சட்டமும் செய்கிறது.

3) **'ஆட்சிமொழி'** என்ற சொல்லில் நடுவண்-மாநிலங்களில் மற்றும் மாநிலங்களுக்கிடையிலானதுமான **'தொடர் மொழி'** (Link Language) **'பயிற்று மொழி'** (Medium of Instruction) **'தேர்வு மொழி'** (Language of All India Examination) மற்றும் அரசுப் பணித்துறைக் கருமியங்களுக்காகப் பயன்படுத்தப்படும். **'அலுவல் மொழி'** ஆகிய நான்கும் அடங்கும். ஆங்கில நீட்டிப்புக் கென வரையறுக்கப்பட்டவைகளும் நெறிவிலக்குகளும் நீங்கலாக மேற்சொன்ன நால்வகைப் பயன்களுக்காகவும், இந்தி பயன்படுத்தப்படலாம். இப்படித் தெளிவற்ற சிக்கல் நிறைந்த-குழப்பத்தைத் தருகிற — **'ஆட்சிமொழி'** இனியும் தேவைதானா? இல்லை.

4) இந்தியோ அல்லது வேறு எந்த ஒரு மொழியோ ஆட்சி மொழியாக இயங்கினால் மற்ற மொழித் தேசிய இனங்கள் அடிமையாக்கப் பட்டு விடும் என்ற காரணத்தால் அனைத்து ஆற்றல்களும்

www.thamizham.net - Free E book No 7523

நிறைந்த 'ஆட்சி மொழி' (Official Language) என்ற ஒன்று இனி இந்தியாவில் இருக்கக் கூடாது.

5) ஆங்கிலம், இந்தி என்ற 'இருமொழிக் கொள்கை' அனைத்துத் தேசிய இனங்களுக்கும், சமநிறைமையும், சம வாய்ப்பையும், சமத் தகுதியையும் தருவதில்லை. இந்தி பேசுவோருக்கு இந்தி தாய் மொழியாவதால், ஆங்கிலம் என்ற அயல் மொழி அவர்களுக்குத் தேவையில்லை. இந்தி பேசா மாநிலத்தவர்க்கும் ஆங்கிலம் வேற்று மொழியாவதால் தமது தாய்மொழியை விட்டு ஆங்கிலத்தை ஏற்று, இந்தி பேசும் மக்களுடன் சமநிலையில் இயங்க முடியாது. அதனால் இந்திப் பகுதியினர்க்கு வாய்ப்புள்ள இயல்பான சூழ்நிலையும், இந்தி பேசாதவர்க்குத் தாய்மொழி அகற்றப்படும் அவல நிலையும் ஏற்படும்.

6) "மும்மொழித் திட்டம்" என்பது வெறும் பாடத் திட்டமேயன்றி, ஆட்சிமொழிச் சிக்கலைத் தீர்க்கும் முழுமையான தீர்வு அன்று. அதனை இது வரையும் எந்த மாநிலமும் ஏற்கவில்லை.

7) மூதறிஞர் இராசாசி அவர்கள் கூறியது போல, 1950-ஆம் ஆண்டுக்கு முன்பு ஆங்கிலம் இருந்த (ஆட்சி மொழி) பழைய நிலையையே மீண்டும் செயல்படுத்தினால், அனைத்திலும் ஆங்கிலம் தான் கோலோச்சும். மாநில மொழிகள் மறைந்துவிடும். இந்திமொழி முற்றுருமைக்கு மாற்று வழி ஆங்கில மொழி முற்றுருமை அன்று.

8) 15 தேசிய மொழிகளையும், ஆட்சிமொழிகளாக ஆக்கினால் அனைத்துத் துறைகளிலும் குழப்பமும் சிக்கலும் தான் மிஞ்சும். உரிய தீர்வு கிட்டாது. எனவே பன்மொழித் திட்டம் பயன்தராது.

9) எனவே இந்திய ஒற்றுமை குலையாமல் இருக்க, இன்றியமையாத் தேவைகளுக்காக மட்டும் "பொதுத் தொடர்பு மொழி" (Link Language) ஒன்றை அனைத்துத் தேசிய இனங்களும் சம நிறையைப் பெறும் வகையில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

10) காந்தியடிகளின் கொள்கைக்கேற்ப, அப்பொதுத் தொடர்பு மொழி, மாநில மொழிகளின் அனைத்துப் பயன்பாடுகளிலும் ஊடுருவல் செய்யலாகாது. அஃதாவது மாநில மொழிகள், அந்தந்த மாநிலங்களில், பயிற்று மொழியாகவும், அலுவல் அல்லது ஆட்சி மொழியாகவும், அறமன்ற மொழியாகவும், இருக்கும் தனி நிலைகளில் எவ்வகையாலேனும் "பொதுத் தொடர்புமொழி" தலையிடலாகாது.

(தொடரும்)

---

## விற்பனைக்கு அணியம்!

'பாவலரேறு'வின் அரிய கட்டுரைத் தொகுப்பு "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்களின்" மறுபதிப்பு விற்பனைக்கு அணியமாக உள்ளது. விலை உருபா 2-25. — தேவைப்படுவோர் எழுதிக்கேட்க.

— அமைச்சர்.

www.thamizham.net - Free E book No 7523

# தமிழர் நாங்கள் அல்லோம்!

— புலவர் ப. எழில்வாணன் இலக். இ

தமிழர் நாங்கள் அல்லோம்—எங்கள்
தமிழோர் மொழியும் தமிழ்மொழி அன்றே!

வல்லடிமை நாளும் பட்டு—தமிழ்
வஞ்சகரால் மதியுங் கெட்டு;
தொல்லுரிமை வீரம் இழந்து—வாய்ச்
சோற்றுக்கே தம்மை மறந்து
துயில்பவர்தாம் தமிழர் என்றால் ... (தமிழர்)

தாய்மொழியாம் தமிழை அழிக்க,—பிற
தரங்கெட்ட மொழியின் சொல்லை
நாய்ச்செயல்போல் கலந்துபேசி,—தூய
நந்தமிழைச் சேற்றில் வீசி
நலிபவர்தாம் தமிழர் என்றால் ... (தமிழர்)

ஆங்கிலச்சொல் பற்பல கொண்டு—வட
ஆரியர்கள் சொற்களைத் தின்று
வாங்குகின்ற சொற்களில் நின்று—உயிர்
வாழ்வதற்கு தன்வலி இன்றி
வளர்வதுதான் தமிழ்மொழி என்றால் ... (தமிழர்)

இலக்கணத்தில் வழுவியே நின்று—நாளும்
இலக்கியங்கள் தோன்றுவ தின்றிக்
கலப்பினிலே தன்னுரு வளர்ந்து—தமிழ்க்
கல்லாதார் வாயினில் சிறந்து
கனிவதுதான் தாய்மொழி என்றால் ... (தமிழர்)

தாய்மொழியாம் தமிழினை வீழ்த்த—வாழும்
தமிழரையே கணைகளாய் ஆக்கும்
நோய்மனத்தார் வலையினில் விழுந்து—அவர்
நூலெழுதும் முறையினைப் புகழ்ந்து
நொடிப்பவர்தாம் தமிழர் என்றால் ... (தமிழர்)

தனித்தவொரு தன்மையை இழந்து—நிதம்
தரங்கெட்ட தாள்களில் வளர்ந்து
நினைத்தபடி சொற்களில் சிதைந்து—கீழோர்
நிலைக்கேற்ப இனிமையில் குறைந்து
நிலைப்பதுதான் தமிழ்மொழி என்றால் ... (தமிழர்)

www.thamizham.net - Free E book No 7523

# இசைத் தமிழ்

—இலவை பொன். கண்ணன்.

இசைக்குத் தாயகம் தமிழகமே. இசைக் கருவிகள் கண்டுபிடிப்பு தமிழனுடையதே. இன்றுள்ள இசைக் கருவிகள் அனைத்தும் மூன்று வகைப்பட்டன. ஒன்று காற்றுக்கருவிகள், இரண்டு தோற்கருவிகள் மூன்று நரம்புக்கருவிகள். இந்த மூன்றையும் முதன் முதலில் கண்டு பிடித்து அதற்குத் தமிழிலான குழல், முழவு, யாழ் என்று பெயரிட்ட அவன் அறிவின் உயர்வை என்னென்று புகழ்வது.

தமிழகத்திற்கே உரிய சில நிலத்திணை வகைகள் உண்டு. அவற்றில் மூங்கில் ஒன்று. மலையும் மலையைச் சார்ந்த பாங்கான பகுதிகளிலும் செழித்து வளரும் இம் மூங்கில்களை வண்டுகள் துளைக்கும். இந்தத் துளைகளில் தென்றல் காற்று வீசும் போது துளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு வியத்தகு ஒலிகள் எழுவதைக் கேட்டான். அவற்றை மென்மேலும் தன் அறிவுத் திறனாலும் கலை உணர்வாலும் பன்னெடுங்காலம் ஆய்ந்து ஓர் அரிய இசைக் கருவியைக் கண்டெடுத்தான். அதுவே குழல்.

காட்டிலும் காட்டைச் சார்ந்த பகுதியிலும் விலங்குகளை வேட்டையாடினான். அவ்விலங்குகளின் இறைச்சியை உண்டு தோலை மரக் கிளைகளில் உலர்த்தினான். உலர்ந்த தோல்களின் மீது தென்றல் காற்று வீசுகையில் மரங்களின் மிலார்கள் படும்போது ஓர் வியப்பான ஓசையைக் கேட்டான். இதை மென்மேலும் ஆய்ந்து மரத்தாலான, மண்ணாலான குடங்களின் ஒரு பக்கத்தும் இரு பக்கத்தும் இழுத்துக் கட்டி ஓர் அரிய இசைக் கருவியைக் கண்டு பிடித்தான். ஆம் அதற்கும் தனித்தமிழ்ப் பெயரிட்டான். அதுவே முழவு.

வேட்டையாடிய விலங்குகளின் நரம்புகள் சிலவகை மரங்களின் நார்கள் போன்றவற்றை முறுக்கேற்றி இழுத்து இலேசாக உரசும் போது ஓர் ஒலி உண்டாவதை அறிந்தான். அதையே ஆய்ந்து ஆய்ந்து சில உலர்ந்த காய்கள் இலேசான மரப்பெட்டிகள் போன்றவற்றில் பல நரம்புகளை இழுத்துக்கட்டி அதன் மூலம் வெவ்வேறு வகை ஒலிகளை எழுப்பி மகிழ்ந்தான். அந்தக் கண்டுபிடிப்பின் முழு வளர்ச்சியே யாழ்.

இறைவனையே இசையாகவும், இசையையே இறைவனாகவும் கண்டவர்கள் தமிழர்கள். "ஏழிசையாய் இசைப்பயனாய்" என்று தேவாரம் கூறுகிறது. இப்படி இசையின் நுணுக்கத்தை அறிந்த நம் முன்னோர்கள் செய்த இசை நூல்கள் ஏராளம். பல நூல்களைக் கடக (ஆடி)த் திங்களில் ஆற்றில் இட்டனர். கணக்கற்ற நூல்களைக் கரையான்கள் விருந்துண்டு வீணாக்கின. மறைவோர்களால் மறைக்கப்பட்டவையும், எதிரிகளால் எரிக்கப்பட்டவையும் பல. தீயவர்களால் திருத்தி எழுதப்பட்டவை பல.

**மறைந்த இசைத்தமிழ் நூல்கள் :**

(1) இசைத் தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை.

www.thamizham.net - Free E book No 7523

அவர் நினைவாக.

# சுந்தரேசனார் இரங்கல்

ஒளிசேர் திருநுதல் வெண்ணீறும்—ஓர்
உரையில் திகழும் மெய்ப்பொருளும்
அளிசேர் அன்புப் ஒப்புரவும்—நல்
அடியார் வணங்கும் திருவடியும்
களிசேர் அறிவின் கொண்முடியும்—ஒரு
கண்ணில் நின்றே உலகுவப்பத்
தெளிந்தார் உவப்பப் பண்ணுய்வ—நீ
தெய்வத் திருமுன் சேர்கையிலே!

குருதியும் நின்று நரம்பற்றே—என்
குடலும் நெஞ்சும் வெந்தழிவ!
கருதிக் காணும் மனமற்றே—ஒரு
கணமும் இருப்பப் பயனற்றே
உருவில் இறைவன் உவந்தளித்த—ஒண்
உயிரார் இசையின் பண்ணுய்வ
கருமம் முடியா திருக்கையிலே—நீ
கழலோன் திருமுன் சேர்க்கையிலே!

— வை. வீராண்டான் — சுப. குப்புச்சாமி

(முன் பக்கத் தொடர்ச்சி)
(2) இசை நுணுக்கம் (சிகண்டி).
(3) இந்திர காளியம் (யாமளேந்திரர்).
(4) குலோத்துங்கன் இசை நூல். (5) சிற்றிசை.
(6) பேரிசை (7) பஞ்சபாரதீயம் (தேவக் குடி நாரதன்),
(8) பதினறு படலம்.. (9) பெருநாரை. (10) பெருங்குருகு.
(11) வாய்ப்பியம். (12) இசையாயிரம்.

மறைந்தவை என்று அறியப்பட்டவைகளில் சிலவே இவை. அறியப் படாமல் மறைந்த,மறைக்கப்பட்ட இசைத் தமிழ் நூல்களின் எண்ணிக்கையை அறியவல்லார் யாரே !!

இந்த வகையில் அழிந்து போன இசைநூல்களில் ஒன்று என்று கருதப்பட்ட ஒரு நூல் சில ஆண்டுகட்கு முன்பு கண்டெடுக்கப் பெற்று வெளி வந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அடியார்க்கு நல்லார் உரையில் "அறிவனர் இயற்றிய பஞ்ச மரபு" என்று குறிப்பிடப்படுகிறது. இந்த ஒப்பற்ற இசை நூலின் மூலச் சுவடி கண்டெடுக்கப்பட்டு வேலப்பாளையம் வித்துவான் வே. ரா. தெய்வ சிகாமணி (கவுண்டர்) அவர்களால் பதிப்பிக்கப் பெற்றுப் பொள்ளாச்சித் தொழிலதிபர் நா. மகாலிங்கம் அவர்களின் நன் முயற்சியாலும் பண்ணாராய்ச்சி அறிஞர் சுந்தரேசனார் அவர்களின் ஆய்வடிப் படையிலும் வெளியிடப் பெற்றுள்ளது. இப்படி அழிந்தவை போக மீதமுள்ள நூல்களிலும் இசைத் துறையில் நமது மேன்மையை, முதன்மையை வலியுறுத்தும் சான்றுகள் ஏராளமாக உள்ளன. இனிமை பயக்கும் தமிழிசையைக் காப்போம். o

www.thamizham.net - Free E book No 7523

பாவாணரை அறிந்தார் பார்வைக்கு :

# சொற்பிறப்பியல் அகரமுதலி எழுத இக்கால் எவருக்கும் தகுதியில்லை

—தமிழூர் **ப. அருளி.** வணி.இ, ச.இ.,

கி.மு. 1500 ஆண்டளவில், சின்ன ஆசியாப் பக்கத்தினின்று பாரசிகம் வழிவந்து, ஆகசுசு ஆற்றுப் பள்ளத்தாக்கில் தங்கிய கீழையாரில் ஒரு சாரார் இந்துக்குசு மலைத்தொடர்க் கணவாயுங் கடந்து, காந்தார நாட்டு (ஆபுக்கானித்தானம்) வழிச் சிந்துவெளிக்குள் புகப்புக,—தோராயமாக அரையிலக்கம் ஆண்டுகளாகக் கருவிளர்ந்து, உருவளர்ந்து, திருமலர்ந்து செழிப்புற்றிலங்கிய நம் அருந்தமிழ் மொழியும், அதன் உரிமையராகிய நம் முந்தைத் தமிழரும், தளர்ச்சியும் தாழ்ச்சியும் நலிவும் நலுக்கமும் உற்று, அந்நிலை தொடர்ந்து வருவது, இற்றைக்கு உணர்வு கிளர்ந்துள்ள தமிழ நோக்கினர் அனைவரும் அறிந்த ஒன்றே.

திருவள்ளுவர் காலந்தொட்டு இடையூடு ஊடாகத் தமிழ விழிப்புக்கு நெய்யூற்றி விளக்கங்கொளுத்தியோர் தொடர்ந்தனராயினும், அடிப்படைக் கால்கோளில் வலிவு திணித்தவருள் தலையாய், நின்று நிறைவளித்தவர் நம் செந்தமிழரிமா, 'சொல்லாய்வு மாக்கோன், 'மொழி ஞாயிறு **தேவநேயப் பாவாணர் அவர்களே** என்பது மெய்யாய்த் தமிழ்த் தொடர்புடையோர்க்குத் தெளிவாகத் தெரியும்.

தனித்தமிழ்ச் செயற்பாட்டு முன்னோடியரில் சிறப்பும் புகழும் பெற்ற மறைமலையடிகளாருங் கூட, மதவியலில் கண்ணை நாட்டி விட்டமையால், முழுத்திறத்தையும் தமிழுக்கே பயனுக்காது மறைந்தார். ஆனால் நந்தமிழ்ப் பாவாணர் அவர்களோ தமிழ் வளர்ச்சியையும் மீட்பையுமே முதலும் முடிவுமான பூட்கையாக (கொள்கையாக) ஏற்று, தம் ஆசிரிய வாழ்வுத் தொடக்கத்தினின்று, உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் பொதுநிலைக் கரத்தரங்கின் மேடை முழக்கம் வரை இழையறுது செயல்பட்டார். தமிழ்மொழி தோன்றிய காலமுதல், அவர் காலம் வரை, அவர்க்கு இணையாகச் சொல்லத் தமிழியல் துறையில் எவருமே இல்லை என்று சொன்னாலும் அது மிகையாகாது.

தமிழ்மொழி, — திரவிடமொழிகட்கெல்லாம் தாய்மொழியும், ஆரிய மொழிகட்கெல்லாம் மூலமொழியும், ஆகும் என்று தாம் தெளிந்த மெய்க் கொள்கைக்குத் துணைசெய்ய ஏறத்தாழ நாற்பதுக்கும் மேலான அரிய ஆராய்ச்சிக் கருவூல நூல்களை எழுதி வெளிப்படுத்தினார். ஆயினும் தனித் தமிழ்ச்சொற்கள் இவை மட்டுந்தாம் என்று முழுக்க முற்ற வரையறுத்து முடிக்காமலும், சொற்பிறப்பியல் நெறிமுறைகளுக்காக (Principles of Etymology) அவர் எழுத

www.thamizham.net - Free E book No 7523

விருந்த நூலை எழுதாமலும், விழிப்பவும் தோன்றாத பன்னூறு சொற்களுக்கு வேர்நிலை விளக்கத்தை வெளிப்படுத்தாமலும், அத் துறையில் ஓரளவேனும் தொடர்புடைய ஒருவரையும் பயிற்றாமலும், (பதின்மூன்று அளவுத் திட்டத்தில் முதன் மடலத்தின் முதல் பகுதியை மட்டுமே முடித்து), தம் அகரமுதலியில் பத்தில் ஒரு பங்கு தானும் முடிக்காமலும், — செந்தமிழ் ஞாயிறு திடுமென இயற்கையெய்தி விட்டமையால், தனித் தமிழ்ப் பாசறையினர் அனைவரும் ஒருசேர நைந்து கலங்குகின்றோம்.

அகர முதலித் திட்டத்துறையில் பணியாற்றுகின்ற சொல் தொகுப்பாளராகிய (Compiler) திருவாளர் மதிவாணனாருங்கூட, ஊக்கமாகவும் முன்னணியமாகவும் இருந்திருந்தால் பாவாணரிடம் ஓரளவேனும் அடிப்படையைக் கற்றுக் கொண்டிருக்கலாம். மொழி யியல் அறிஞர்கள் பலர் தொடர்புடன் அப்பணியை ஓரளவுக்கேனும் நிறைவடையச் செய்ய முயன்றிருக்கலாம். திரு. மதிவாணனார், இதுவரை தாம் வெளிப்படுத்தியுள்ள பத்து நூல்களில் மொழி பற்றி எழுதியவை இரண்டு சிறு நூல்களே! ஒன்று தமிழ்மொழி வளர்ச்சி பற்றிய பொதுக் கருத்துகள் அடங்கியது. மற்றொன்று கன்னட நாட்டுப் பண்டாரகர் திரு. சாமா (சாத்திரி) அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, திரு. கோவிந்தபை என்னும் கன்னடியரால் "க்ரீக் ப்ரஅசன தல்லி கன்னட மாதுகளு" என்ற ஆய்வுக் கட்டுரை வரையப்பெற்று, கன்னடப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்ற, கிரேக்க நகைச்சுவை நாடக நூலு டன் 20 பக்க அளவில் குறிப்புகள் எழுதி, "கிரேக்க நாடகத்தில் தமிழ் உரையாடல்" என்னும் தலைப்பில் வெளிவந்தது. (சூலை-1978).

அச் சிறு நூலிலும், விரவி வரும் உரையாடல்கள் திரவிட மொழியே என்று நிறுவலும், பிறகு—பிறக்கு—பிறக்கெ— பக்கெ-பக்செ—Paktei (Gk.) எனச் சொல் திரிபுநிலை காட்டலும், பழந் தமிழ்ச் சொல் அல்லது சொற்றொடர் எனும் பகுதியுள், 'திராட்சை" 'சோமேசுவரர்', 'சும்பசரம்', அருத்தம் (பொருள்), பானம் என்ற சொற்களையும் பட்டியலிட்டிருத்தலும், பயணம், வாரம் என்பன போலும் வடசொற்களையும் வேறுபாடறியாது கையாளலும், கடல் வாணிகம் செய்த கிரேக்கருக்குத் தலைமையாகப் பழந்தமிழும், அதன் திரிபான பழங்கன்னடமும் தெரிந்திருக்கும் என்பதில் ஐய மில்லை என்று உள்நோக்கொடு நாட்டலும்,—மொழியாய்வில் காலடி எடுத்து வைக்கவும் இவர் இப்பொழுதைய அளவில் பொருத்த மற்றவர் என்பதைப் புலப்படுத்துவனவாகும்.

முன்பு ஒருகால், செந்தமிழ்ச் செல்வியில் "மொழியகழ்வாராய்ச் சியால் ஏற்படும் நன்மைகள்" என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை, பாவாணர் ஐயா அவர்கட்குச் சினம் ஏற்படுத்தி 'மொழி

www.thamizham.net - Free E book No 7523

யாராய்ச்சியும் மொழியகழ்வாராய்ச்சியும் ஒன்றே' என்று எழுத வைத்தது. பாவாணர் நூல்களை அண்மைக்காலம் வரைகூட, இவர் சரிவரப் படியாதிருக்கிறார் என்பதற்குப் பல்வேறு சான்றுகளுமுள. இவரின் தாய்மொழி கன்னடமாயிருப்பதால், திராவிடமொழிகளில் ஒரு சிலவற்றில் உள்ள சொற்களைத் தொகுத்துத் தருவாரில் இவரும் ஒருவராக இருந்து செயல்படத் தகுதியுடையவர்தாம். பாவாணர் அவர்கள் இவரையெல்லாம் தொடர்ந்து துணையிருக்கச் செய்து செ. சொ. பி. யை விரைந்து முடித்துவிடாது மறைந்தது, பெரு வகையில் தமிழுக்கு இழப்பும் போகூழுமே!

'என் கல்விப் பரப்பையும் ஆராய்ச்சியாழ்வையும் அவர் (சில தமிழ்ப் பேராசிரியர்) இன்னும் அறிந்திலர்.........அறைகூவி அழைக்கின்றேன். என்னைத் தவிர வேறெவரும் இப் பணியைச் செய்ய வியலாதென்று அறிந்திருந்தும்.... ...தமிழாக்கத்திற்கு இன்றியமையாததும், என்னையன்றி வேறெவரும் செய்ய வியலாததுமான சொல் தொகுப்பு .......... நான் கடந்த முப்பாண்டுகளாக (30) மொழியாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியும் முறைப்படி செய்து வந்திருக்கின்றேன் .. .. ..... (20-8-1961) (செ. ப. க. த. அகராதியின் சீர்கேடு), என்பன போன்ற திணுக்கத் தென்பு மதர்ப்புத் தெரிப்புகளையும் அவருடைய நூல்களையும் சற்றே தெளிந்தவர்கூட, அவர் இடத்தில் அவர்துறையைப் பொறுத்தவரை பிறரை ஏற்றி வைத்தெண்ணக் கூசுவர்; அதுவும், அவர் எழுதி விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தெழுதும் வல்லமையும் மதுகையும் இற்றைத் தமிழகத்தில் எவரிடமேனும் உளவா என்ற கேள்வியைக் கூடத் தம் மனத்தே எழுப்பவும் விரும்பமாட்டார். அத்தகைய பெருமையர் அவர்.

**புதுச்சொற் படைப்பு:-** ஒலினி (Grama phone), வளரி (Hockey), கூட்டியம் (Band), பகரம், (Substitute) (இவை போன்ற பல சொற்களை 1936-இலேயே வெளிப்படுத்திவிட்டார்). குளம்பி (Coffee), கன்னெய் (Petroleum), ஈரட்டி (Biscuit), தூவல் (Pen) போலும் நூற்றுக்கணக்கான அவரின் புதுச் சொற்படைப்புகள் காலத்தே தோன்றின.

**சொல் வழக்காற்றைத் தமிழகமெங்கும் சென்றறிந்தமை:-** பாவாணர் அவர்கள் தாம் சென்ற விடங்களிலெல்லாம் அவ்வப் பகுதித் தமிழ் வழக்குகளை எவ்வளவு ஆழமாகக் கவனித்து உள்ளத்தில் பதிந்து வந்திருக்கின்றார் என்பது, அவர் வரையும் கட்டுரைகளின் அடிக் குறிப்புகளிலுங்கூடப் பரவலாய்த் தெறிக்கும். சான்று: தள்ளுவதை நூக்குதல் என்பது வடார்க்காடு வழக்கு. தொடையைக் குறங்கு என்பது இராமநாதபுர வழக்கு. காளிக்கு ஆட்டுத் தொடையைப் படைத்தலை அம்மனுக்குக் குறங்கு கொடுத்தல் என்பர் அம் மாவட்டத்தார். சின்ன என்பதை நொய்ய என்பது குடந்தை வழக்கு. இளம்பிஞ்சைத் 'தவப்பிஞ்சு' என்பது திருச்சி வழக்கு, (பக். 81. சொல். கட்).

www.thamizham.net - Free E book.No 7523

**கழகக் கால மரபு வழக்குகளையும் அறிந்த திறன்:-** 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்னும் குறுந்தொகையடியில் (40:1) வரும் 'ஞாயும்' என்னும் சொல் 'மோயும்' என்றிருத்தல் வேண்டும். இத்தகைய மரபு வழுக்கள் கடைக்கழகக் காலத்திலேயே தோன்றிவிட்டன. (பக். 90, பண். தமி. நாக.)

**பழமொழி பயக்கும் திறன்:-** தமிழ் நாட்டில் தாம் சென்றவிடத்தெல்லாம் அங்கங்குள்ள பழமொழி வழக்காற்றிலும் தவழ்ந்தெழுந்து வந்தார் என்பதற்கு, அவர் பேச்சுக்கிடையிலும், கட்டுரைக் கிடையிலும், வழி வழிப் பழமொழிகளை வாரி வீசியமை சான்று காட்டுகின்றன. 'புனமாயினும் புன்செயாயினும் பண்டைத் தமிழர் மேட்டு நிலத்தில் பயிர் செய்ய விரும்பவில்லை'' என்று எழுதுவார் பக்கத்திலேயே 'மேட்டுப் புன்செயை உழுதவனும் கெட்டான், மேனி மினுக்கியை மணந்தவனும் கெட்டான்' என்று அடைவுங் கொடுப்பார்.

**ஏரண முறையில் தாக்கும் திறன்:-** மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்று (877. தொல்) = (இதற்கு வையாபுரியாரின் பொருள் விளக்கம், சொற்களின் பொருட்காரணத்தைக் கண்டு பிடிக்க முடியாது) (Tolkappiyam only says that the origin of words is beyond ascertainment) = மேற்கண்ட விளக்கத்திற்குப் பாவாணரின் வினவு விடை : 'விழிப்பத் தோன்று' என்பது தோன்று என்றே பொருள் படுவதாயின் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (640-தொல்) என்று வேறோரிடத்தில் அவரே எங்ஙனம் முரண்படக் கூறியிருக்க முடியும்?

**ஆரியத்தைக் கடுமையாய் எதிர்த்தல்:-** 'சாமிநாதையர் தமிழுக்கு மாபெருந் தொண்டு செய்தார் என்பது உண்மையே. ஆயின், அவர் முன்னோரான பிராமணர் தமிழுக்கு மாறாகச் செய்த வழுவாயின் ஆயிரத்திலொரு கூற்றிற்குக்கூட அது கழுவாயாகவில்லையென்பதை அறிதல் வேண்டும்......பிராமணனுக்கு நாடும், பேச்சும், மொழியும் போன்றே அறவாழ்க்கையும் இல்லை. (தமிழர் மதம்). பிராமணர் அண்டிப் பிழைக்க வந்த அயலினச் சிறு குழுவார்.' (தமிழர் வரலாறு).

அவரின் வேர்ச்சொல் விளக்கமுறைப் போக்கும், அதன் திட்ப, ஒட்ப, நுட்பங்களும், அவரெழுதி வெளிப்படுத்திய நாற்பதின் மேற்பட்ட நூல்களிலும் முழுவதும் செறிந்து பரந்துள்ளமையால், அவற்றின் செழுஞ் சிறப்புகளும், மேம்பட்ட செம்மாப்புகளும், வியப்புகளும் இக்கட்டுரைக்கண் விளக்காது விடப் பெறுகின்றன.

ஒரு மொழியில் அகர முதலி தொகுத்தற்கோ, இலக்கண அறிவு, சொல்லாராய்ச்சி, மொழியாராய்ச்சி, சொற்பெருக்கு, ஆகிய நாற்றிறம் வேண்டும். (பக். 67. வண்ணனை மொழிநூலின் வழுவியல்)

www.thamizham.net - Free E book No 7523

என்பார் பாவாணர். அத்தொடு, நடுவுநிலைமை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்காண் வேட்கை போலும் பல அடிப்படைப் பண்புக் கூறுகளும் மொழியாராய்ச்சியாளனுக்குத் தேவை என்று பல்லிடங்களில் வலியுறுத்துவார். ஓபாத உழைப்பினாலும், தமிழ்ப்பற்றாலும் அவர் பரந்த அறிவு செழித்தவராகையால், சொற்பிறப்பியல் முறை, வரலாற்று அல்லது காலமுறை, ஏரணமுறை ஆகிய மும்முறைகளிலும் தம் நுண்திறத்தால் மொழி மூலங்களைக் கண்டு வெளிப்படுத்தும் திறமும் தகுதியும் பெற்றவராயிருந்தார்.

பாவாணர் அவர்கள் அரைநூற்றாண்டுக்கும் மேலாக மொழியாராய்ச்சியிலேயே மூழ்கித் திளைத்து அடிமுடி கண்டமையாலும், மொழியாராய்ச்சியாளர் ஒருவர்க்கு அமைந்திருக்கவேண்டிய அத்துணைச் சிறப்புக் கூறுகளும் செழிக்கப் பொருந்தியவராயிருந்ததாலும், அவரின் முழுத்திறத் தகுதியை உணர்ந்து தமிழின் மெய்ச் சிறப்பை உலகுக்கு உணர்த்துவார் என்று தமிழையே அவரிடம் தந்து தமிழுலகம் அமைந்திருந்தது. அத் தனியொருவர்க்கு அச் சிறப்பும், மதிப்பும் அளிக்கப் பெற்றிருந்தன.

அத்தகைய புனிதமான பொறுப்பை, தமிழர்களின் எதிர்கால நலத்துக்கு ஊற்றமாகவும், தமிழ்க்குத் தேற்றமாகவும் அமைக்கப் பெற வேண்டிய, அடிப்படையாய் விளங்க வேண்டிய அப் பெரும் பணியில், இக்கால் உள்ள எவரோ ஒருவரைத் திடுமென அமர்த்தி, தமிழ்க்கும் இனத்துக்கும், நாட்டுக்கும் விரைந்து தாழ்வும் வீழ்வும் பட விடுதல் கூடாது.

**பாவாணர் எழுதி விட்ட இடத்திலிருந்து அப்பணியை ஒருவர் தொடர வேண்டுமாயின் அவர்க்கு இருக்கவேண்டிய தகுதிகளாவன:-** (1) நடுவுநிலைமையும், மெய்காண் அவாவும், (2) தூய் தமிழில் ஆழ்ந்த பற்று, (3) பாவாணர் எழுதிய அனைத்து ஆக்க நூல்களிலும் தெளிவும் தோய்வும், (4) தமிழ்மொழி இலக்கண இலக்கிய அறிவு, (5) செப்பமான ஆங்கில அறிவு, (6) ஒலியியல் நூலறிவு, (Phonolgy) (7) மொழியியற் புலமை, (8) சொற்பிறப்பியல் நெறிமுறை அறிவு, (9) திரவிட மொழிப் புலமை. (10) மாந்தனூல் (Anthropology) வரலாறு (History) ஏரணம் (Logic), கலை (Arts) உளவியல் (Psychology) மற்றும் பொது அறிவு, (11) தமிழகமெங்குமுள்ள மொழி வழக்காற்று முறை அறிவு, (12) ஆரியத்திற்கு வெளிப்படையாக எதிரியாயிருத்தல்.

மேற்கண்ட தகுதிநிலைகளில் நிறைவாயிருக்கும் ஒருவரைக் கொண்டு, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொடரப்பெற்றாலேயே தமிழ்க்கு அடிமனை அமைத்ததாகவிருக்கும். இல்லெனில் அடிக்குழி பறித்ததாகவே முடியும். பாவாணர்க்கும் இரண்டகம்

www.thamizham.net - Free E book No 7523

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்.

— மருத்துவ அறிஞர் : **கோ. கோவிந்தனார்.**

உள்ளியம் (ஆர்சனிக்) உடம்பிற்கு வன்மை கொடுக்கும் தன்மையது இத் தன்மையினால், மற்ற வன்மை கொடுக்கும் பொருள்களுடன் இதுவும் சேர்த்துப் பயன் படுத்தப் படுகிறது. 'எர்கோடி'ன் சில நேரங்களில் பயன படுகிறது. அலித்தன்மையுடன் விந்து ஒழுக்கு இருந்தாலும், மிகுந்த விந்து கழிந்தாலும், பட்டையற்ற தசைகளின் மேல் இது செய்யும் வேலைக்காகப் பயன்படுகிறது. 'டேமியன' ஒரு காலத்தில் ஆண்மையைக் கொடுக்கக் கைகண்ட மருந்து எனக் கருதப்பட்டது. இப்பொழுதோ அதைப் பற்றி நினைப்பாரே இல்லை. 'அட்ரோபின்' சில வேளைகளில் பயன்படுகிறது. சிவப்பு மிளகுக் கரையமும் இஞ்சிக் கரையமும் சில நேரங்களில் பயன் படுகின்றன.

### அலித் தன்மைக்கு மருத்துவம்

அலித் தன்மையைப் போக்க காம மூட்டிகளை எது வரை பயன் படுத்திப் பின் மருந்தின் மூலம் முயல வேண்டும் என்று அறிதல் மிகக் கடினமான செயலாகும். கலவி விருப்பத்தை அல்லது ஆண்மையை மிகுதியாக்கும் எப் பொருளும் காம மூட்டி என்றே கருதப்படுகின்றது. நோயாளியின் உடல் நிலையைப் பற்றிக் கவலையே கொள்ளாது, நேராகவே கலவி உறுப்புகளின் மேல் வேலை செய்து பால் விருப்பத்தை ஊட்டுவனவற்றைக் காம மூட்டிகள் என்று கொள்ளலாம். மருந்துகள், பால் உணர்ச்சி குறையக் காரணமான அடிப்படைகளைத் தாக்கித், தடைகளை நீக்கி, அத் தடை நீக்கத்தின் மூலமாகப் பால் உணர்ச்சியைத் தோற்றுவிப்பன எனக் கொள்ளலாம். இங்கு வேறு வழியின் மூலமாக அஃதாவது எதிரிடையாக ஆண்மை பெறப் படுகிறது.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

செய்ததாகவே பின்மரபினர் கருதுகின்ற நிலை வரும்! வையாபுரியர் கூடிக் கொம்மாளம் அடித்த சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியைத் திருத்தக்கோரி வாழ்நாள் முழுதும் நா வரள, கைதேயப் பேசியும் எழுதியும் பாவாணர் குமைந்ததுபோல், மீறிச் செய்யப் பெறும் இவ் வகர முதலியைத் திருத்த, "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் சீர் கேடுகள் (இரண்டாம் பகுதியினின்று)" என்னும் தலைப்பில் நாமும் மடலம் மடலமாக எழுத வேண்டிவரும். தூயதமிழ் நெஞ்சங்கள் நன்கு ஆழ எண்ணுக! ο

www.thamizham.net - Free E book No 7523

இன்றைய பொது மருத்துவர்களைச் சுற்றி எப்பொழுதும் ஒரே நோயாளிக் கூட்டம். ஐயோ! மருத்துவர்களுக்கு அலித்தன்மையைப் பற்றி ஆய்வு செய்ய நேரமுமில்லை, பொறுமையுமில்லை. எந்த நோய்க்குச் சரியான உன்னிப்பு இல்லை; சரியான மருத்துவம் செய்யப் படுவதில்லை என்ற வினா எழுந்தால், உறுதியாக அலித்தன்மைக்குத் தான் என்பதில் எவ்வகை ஐயமும் இல்லை. அலித்தன்மை நோயை ஆய்வு செய்தல் பலர் நினைப்பது போல் அவ்வளவு எளிதன்று. மேலளந்த வாறுகப் பார்த்தால், உறுப்பு அலித் தன்மை, மன அலித் தன்மையின் குறிகளைக் காட்டலாம். அதே போன்று மன அலித் தன்மை உறுப்பு அலித் தன்மையின் குறிகளைக் காட்டலாம். அலித் தன்மைக்குக் காரணம் மனமா, உறுப்பா என்பதைத் தெளிய மிகத் திறமையும், நோய் ஆய்வதில் பொறுமையும் வேண்டும். மற்ற எந்த நோயையும் விட அலித்தன்மை நோய்க்குச் சரியான நோய் ஆய்வு செய்தல் மிகமிக இன்றியமையாதது. அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதை விட, சரியான நோய் ஆய்வு செய்வதுதான் கடினம். சரியான நோய் ஆய்வு செய்யப்பட்டு நோய் இந்த வகையைச் சார்ந்ததுதான் என்று உறுதி செய்யப்பட்டால், பாதி நோய்க்கு மருத்துவம் செய்தது போல் ஆகும். அதனால் சிறிது நேரம் நோயாளியைக் கேள்வி கேட்டுவிட்டுச் சிறிது ஆராய்ந்த உடனேயே, மருத்துவர் ஒருவர், இந் நோய் பற்றி ஒரு முடிவிற்கு வருவாரேயாயின், ஒன்று அவர் அந்நோய் பற்றி ஒன்றும் அறியாத வராக இருக்க வேண்டும். அல்லது அறிந்தவராக இருந்தால் நேர்மைக்குப் புறம்பாக நடப்பவராக இருக்க வேண்டும். நோயாளியைப் பல நாட்கள் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கேட்டு, ஆய்ந்து ஆய்ந்து பழக்கத்தினாலும், திறமையினாலும் மட்டுமே ஒரு முடிவிற்கு வரமுடியுமேயன்றி, ஒன்றிரண்டு ஒலியின் மூலமாகவோ, அல்லது சிறுநீர்க் குழாய் மாணியின் மூலமாகவோ உண்மை நிலையைக் கண்டுபிடித்தல் என்பது பகற்கனவே யாகும்.

நோய் ஆய்வு செய்வதோ மிகக் கடினம். மருத்துவமோ நீடித்து நடக்க வேண்டும், மருத்துவருக்குத் திறமையும், பழக்கமும் பொறுமையும் வேண்டற்பாலன. இம் மருந்தையோ அம் மருந்தையோ சாப்பிட்டால் போதும்; நோய் நீங்கி விடும் என்று நினைப்பதோ நடக்காது. கைப் பக்குவமுறை ....உம்.... பயன் தராது. இவற்றை எல்லாம் நினைத்தால் இந்நோய்க்கு மருத்துவம் செய்யத் தக்கவர், பழக்கப் பட்ட, திறமையுள்ள பொறுமையுள்ள மருத்துவர் தாம் என்பது நன்குபுலனாகும். இருப்பினும் அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதில் சில பொதுப் படையான நிலைகள் உள்ளன. அவற்றைச் சிறிது இங்கு ஆராய்வோம்.

அலித்தன்மை நீரிழிவு, நெஞ்சுநோய், குருதிச் சோகை போன்ற பால் சார்பற்றநோய்களாலும் உண்டாகலாம் என்பதை முன்பே பார்த்

www.thamizham.net - Free E book No 7523

தோம். நீரிழிவு, நெஞ்சுநோய், குருதிச் சோகை போன்ற நோய்கள் உடல் முழுவதையும் வாட்டி வதைக்கின்றன. இந்நோய்களுக்கு மருத்துவம் செய்யாது அலித் தன்மைக்கு மட்டும் மருத்துவம் செய்தால் எவ்வகைப் பயனும் கிட்டாது. அந் நோய்க்ளுக்கு மட்டும் மருத்துவம் செய்து அலித்தன்மையைக் கவனிக்காது விடுதல் அழகன்று. இருவகை நோய்களுக்கும் சேர்ந்தே மருத்துவம் செய்தல் சாலச் சிறந்ததாகும்.

கலவிக் களைப்பு நீங்க, ஓய்வு, ஓய்வு, ஓய்வேதான் வேண்டற்பாலது. அலித்தன்மையின் காரணம் எதுவாயினும் சரியே, அதற்கு மருத்துவம் செய்வதன் முதற்படி ஓய்வுதான். ஓய்வு என்றால் வேண்டுமளவு தூக்கம், உடம்பைக் களைப்புறச் செய்யும் வேலைகளிலிருந்து விலகி இருத்தல், என்ற மட்டில்தான் பொதுவாக எல்லோரும் அறிவர். இங்கு ஓய்வு என்றால், முன் கூறியவற்றுடன் சில காலம் வரை புணர்ச்சி என்ற பேச்சே பேசக் கூடாது என்பதும் சேர்ந்தது ஆகும். களைப்புற்ற கலவி உறுப்புகளும், தடம்புரண்ட நரம்பு நடுவங்களும் தங்கள் இயற்கை நிலையை அடையப் போதுமான இடைவெளியை அவற்றிற்குக் கொடுத்தாக வேண்டும். அத்துடன் அந்நிலையில் புணர்ந்தால் தோல்விதான் ஏற்படும். இத் தோல்வி, நோயாளியின் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்து, நோயாளிக்கு என்னதான் மருத்துவம் செய்தாலும் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக, எவ்வகைப் பயனும் தரா என்பது உறுதி. அத்துடன் இத்தோல்வி, முற்றிய அலித்தன்மையை நோக்கி வெகு விரைவாகத் தள்ளிச் செல்லும். வெறுமனே புணர்ச்சியிலிருந்து விலகி இருந்தால் மட்டும் போதாது. கலவிக் கிளர்ச்சியைத் தூண்டக் கூடிய வற்றிடமிருந்தும் விலகி இருக்க வேண்டும்.

ஓய்வு எடுத்துக் கொள்ளும் காலத்தில் கணவனும் மனைவியும் முழுக்க முழுக்க விலகியே இருக்க வேண்டும். எவ்வகைக் காரணம் கொண்டும் தழுவுதல் கூடாது. ஒரே படுக்கையில் படுக்கக் கூடாது. தனித்தனி அறையிலேயே படுக்க வேண்டும். பெண்களுடன் எவ்வகைத் தொடர்பும் கூடவே கூடாது. பெண்களுடன் நடனம் ஆடுதல், உண்டல், பேசுதல் முதலியனவும் கூடவே கூடாது. இவை மருத்துவத்திற்கு இடையூறு விளைவிக்கலாம். காமத்தைத் தூண்டும் நூல்கள், திரைப்படங்கள், நாடகங்கள், ஆடையற்ற பெண்களின் படங்கள் இவை போன்ற வற்றை அறவே விலக்க வேண்டும். இதையெல்லாம் படித்த உடன் அடேயப்பா! மருத்துவம் மிக மிகக் கடினம் என்று சொல்லத் தோன்றுகின்ற தன்றோ? ஆனால் முழு மனத்துடனும், உண்மையாகவும் இவற்றைக் கைக் கொண்டால், கடினத்திற்குத் தகுந்த கூலி கிடைக்கும் என்பது உறுதி. மனைவியிடம் நிலைமையை விளக்கிக் கூறி, மனைவியின் ஒத்துழைப்பையும் பெற வேண்டுமேயன்றி, மனைவியிடம் கடுகடுப்பாக நடந்து, வெறுப்பைக்

www.thamizham.net - Free E book No 7523

அயல் மாநிலங்களில் தமிழினத்திற்கு
நேர்கின்ற அழிவுகள்?

# கோலார் தங்கவயலில் கொடுமை!

- கருநாடகத்தில் நடப்பது என்ன?
- கன்னட மொழிச் சிக்கலால் தமிழர்க்கு ஏற்பட விருக்கும் தாழ்ச்சிகள் எவை?
- கோகாக்குழு (Gokak Committee) செய்த முடிவு எவ்வகையில் அங்கு வாழும் சிறுபான்மையினர்க்குக் கேடானது?
- இக்கட்டுரையைப் படியுங்கள்; விளக்கம் தெரியும்!

(இதன் தொடர்பாக வந்துள்ள செய்திகள் இவை :

கோகாக் குழுவின் பயிற்று மொழித் திட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில், காவலர்கள் செய்த துமுக்கி (துப்பாக்கி)ச் சூட்டில், அதிகார அறிக்கையின் படி இருவர் இறந்தனர் என்றும் அதிகாரமற்ற செய்தியின்படி பதின்மருக்கு மேல் இறந்தனர் என்றும் கேள்விப்படுகிறோம். அடிபட்ட சிலர் அரசினர் மூளை, நரம்பியல்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கட்டிக் கொண்டு மருத்துவத்திற்கு இடையூறு விளைவிக்கக் கூடாது. நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் மருத்துவம் செய்வது பற்றியே தெரியக் கூடாது. தெரிந்தாலோ வந்து விணை, தங்களுடைய பேரறிவை அவிழ்த்து விடத் துவங்கிவிடுவர். அதனால் நினைக்க முடியாத் தொல்லைகள் உண்டாகலாம். மருத்துவம் செய்வது, நோயாளி, நோயாளியின் மனைவி, மருத்துவர் இம்மூவருக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்க வேண்டும்.

புணர்ச்சியிலிருந்து விலகி இருக்கும் காலங்களில் மருத்துவர் சிலர் நோயாளிகளுக்கு 5 'கிரைன்' புரோமைட்டு ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் கொடுப்பர். ஓய்வின் கால அளவை உறுதி செய்தல் இன்றியமையாதது. ஓய்வு மிகுந்த கால அளவாக இருக்கக் கூடாது, கலவி வேலைகள் புத்துயிர் பெறும் பொழுது, பிழைபடப் பயன் படுத்தப் பட்டால் கெடுவது போன்றே சரியாகப் படுத்தப் படாவிட்டாலும் கெடலாம், பொதுவாக ஓய்வு ஒரு மாதத்திலிருந்து இரண்டு மாதங்கள் வரை நீடிக்கலாம். நோயாளி இளைஞராகவும், கலவிக் களைப்பு மிகுதியாக உடையவராகவும் இருந்தால், ஓய்வுக் காலத்தை நீட்டிக்கலாம். ஆனால் அகவையானவர்களுடைய கலவி வேலையில் மிகுந்த இடைவெளி ஏற்பட்டால், அந்த ஓய்வு அலித் தன்மையை நீக்குவதற்குப் பகரமாக, முற்ற வைக்க உதவலாம். அதனால் ஓய்வுக் காலம் எவ்வளவு தான் வேண்டுமென்பதை முதலில் அறுதியிட்டுக் கொள்ள வேண்டும். அக் காலம் ஒரு மாதத்திற்கு மேல் போகா தபடி பார்த்துக் கொள்ள வேண்டும். (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7523

மருத்துவ மனையில் சேர்க்கப் பெற்றுள்ளனர். நூற்றுக் கணக்கானவர்கள் காவலரின் துமுக்கிச் சூட்டால் படுகாய முற்றுள்ளனர். கோலாரில் உள்ள ஆண்டர்சன் பேட்டை, சேம்பியன் ரீப், மாரிக் குப்பம், உரிகம், அசோக் நகர் பகுதிகள் பெருத்த சேதங்களுக் குள்ளாகி யிருக்கின்றன. அரசினர் நடுவண் மருத்துவ மனையிலும், பொது மருத்துவ மனையிலும், இராபர்ட்சன் பேட்டை, பாரத தங்கச் சுரங்க மருத்துவ மனையிலும் நூற்றுக் கணக்கானவர் சூட்டுக் காயங் களுக்காகப் பண்டுவம் செய்யச் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்களுள் பலபேர் குண்டுக் காயங்களால் உயிர்க்குக் கேடான நிலையில் உள்ளனர் என்று தெரிய வருகிறது. கடுமையாகக் காயம் பட்டவர்கள், இறந்து போனவர்கள் ஆகியவர்களுள் மிகப் பெரும் பாலானவர்கள் தமிழர்களே! காவல்துறையினர் திட்டமிட்டு அங்கு வாழும் தமிழர் களையே வீடு புகுந்து தாக்கியிருக்கின்றனர். ஏராளமான தமிழ்ப் பெண் கள் அவமானப் படுத்தப் பட்டுள்ளனர். கோலார் தங்கச் சுரங்கத்தில் பணியாற்றும் 13000 தொழிலாளர்களும் போரட்ட நாட்களில் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். அங்குள்ள அனைத்துப் பள்ளிகளும் கல்லூரி களும் மூடப்பட்டுள்ளன. கருநாடகத்தில் உள்ள அனைத்து எதிர்க்கட்சி களும் ஒன்றிணைந்து, அங்குள்ள சிறுபான்மை மொழியினர் (குறிப் பாகத் தமிழர்கள்) கன்னட மொழியை எதிர்த்துப் போராடவில்லை யென்றும், ஆனால் கன்னட மொழி கட்டாயப் பாடமாக அங்குள்ள கன்னடம் பேசாத மக்கள் மீது திணிக்கப்படுவது கூடாது என்பதே தங்கள் கோரிக்கை யென்றும் அரசுக்கு அறிக்கை கொடுத்துள்ளனர். இந்நிலையில் கோலாரில் வாழும் தமிழன்பர்கள் சிலரிடமிருந்து கீழுள்ள சில செய்திகள் பெறப் பெற்றன. அவற்றைத் தென்மொழியன்பர்கள் அறியும் பொருட்டு இங்கு வெளியிடுகிறோம்.)

அண்மையில் கருநாடகத்தின் மாநில மொழியாகிய கன்னடம் மூன்றும் இடத்திற்குத் தள்ளப்பட்டு, குண்டுராவ் அரசால், சமசுக் கிருதம் முதலிடத்திற்கும், ஆங்கிலம் இரண்டாம் இடத்திற்கும் வந்தன. கன்னட நாட்டில் கன்னடத்திற்கு முதலிடம் என்ற விழிப் புணர்வு ஏற்பட்டதுப், முதலிடத்திலிருந்த சமசுக் கிருதத்தை அகற்றி, அவ்விடத்தில் கன்னடத்தை அமர்த்தி விட்டால், சமசுக்கிருதத்தை எவ்விடத்தில் வைப்பது என்பதை ஆராய்வதன் பொருட்டு, அரசால் அமைக்கப் பட்டதே கோகாக்குழு (Gokak Committee).

ஆனால், கோகாக் குழு, அஃது அமைக்கப்பட்டதன் நோக்கத்தி லிருந்து வழுவி, கன்னடியர்க்கும், மொழிச் சிறுபான்மையினர்க்கும் இடையே சிண்டு முடிந்து விட, **கன்னடத்தை மட்டும் முதற்பாட மொழியாகவும், ஆங்கிலத்தை** இரண்டாம் பாட மொழியாகவும், அங்குள்ள சிறுபான்மையினரின் தாய்மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, மராட்டி, உருது, இந்தி—ஆகிய மொழிகளில் அவரவர் விருப்பப்படி மூன்றும் மொழியாகவும் அறிவிக்கப் பட்டன.

www.thamizham.net - Free E book No 7523

இந்நிலையில் சிறுபான்மையோர், தங்களின் தாய்மொழிகளை, முதன்மையாகக் கற்றுக்கொள்ள வாய்ப்புகள் குறைக்கப் பட்டதையும், அம்மொழிகள் அழிக்கப் படுவதையும் உணர்ந்து, இவ் வேற்பாட்டை எதிர்த்துக் குரலெழுப்பினர். இவ்வெதிர்ப்பைத் தெரிந்து கொண்ட மாநில முதல்வர் திரு. குண்டுராவ் அவர்கள், கோகாக்குழு அறிக்கையில் மாற்றம் செய்து, சிறுபான்மையோரின் மொழி உரிமையை மதித்து, அவர்களின் நயமான வேண்டுகோள் படி **கன்னடர்க்கு மட்டுமே கன்னடம் முதல் பாட மொழியாகவும், கன்னடம் தாய் மொழி யல்லாதார்க்கு அவரவர் தாய்மொழியே முதல் பாடமொழியாகவும்**, ஆனால் மாநிலமொழியாகிய **கன்னடம்** அனைவர்க்குமே **இரண்டாம் கட்டாயப் பாட** மொழியாகவும், **ஆங்கிலம் மூன்றும் பாட மொழி**யாகவும் அறிவித்தார். இதை அனைத்துச் சிறுபான்மையினரும், பிறரும் நடுநிலையுள்ளத்துடன் வரவேற்றுப் பாராட்டவும் செய்தனர்.

இத்திட்டம், சிறுபான்மையோருக்குத் தங்கள் தாய்மொழியை முதல் மொழியாகக் கற்றுக்கொள்ள வாய்ப் பளிப்பதை அங்குள்ள கன்னட வெறியர்கள் விரும்பவில்லை. சிறுபான்மையோருக்குத் தங்கள் தாய் மொழிகளைக் கற்றுக் கொள்ளத் தரப்பட்ட உரிமையைப் பறிக்கவும், தங்கள் தாய்மொழியாகிய **கன்னடமே** அங்குள்ள அனைத்துச்சிறுபான்மையினராலும் **முதல் பாட மொழி**யாகக் கற்கப் பட வேண்டும் என்னும் வெறியாலும், கன்னடத்தையே மீண்டும் முதல் பாடமொழியாக அரசு கொண்டு வர வேண்டும் என்று சிறுபான்மையோர் நலன்களுக்கு எதிராகக் கிளர்ச்சி தொடங்கினர். அக் கிளர்ச்சியில்தான் திரைப்பட நடிகர் திரு. இராசகுமாரும் ஈடுபட்டார்.

கன்னடியர்களின் இந்தக் கிளர்ச்சியாலும் எதிர்ப்பாலும், முதல்வர் திரு. குண்டுராவ் நிலைதளர்ந்தார். மூன்றுவது திருத்தமாக இன்னொரு திட்டத்தைக் கொண்டு வந்தார். கன்னடத்தை மட்டுமே முதற்பாடமொழியாகவும், ஆங்கிலத்தை இரண்டாம் பாடமொழியாகவும், சிறுபான்மையோர் மொழிகளாகிய தமிழ், தெலுங்கு, உருது, மராத்தி, இந்தி ஆகியவற்றுள் ஒன்றை மூன்றும் மொழியாகவும் கற்க வேண்டும் என அறிவித்தார்.

தாய்மொழியை முதல் மொழியாகப் பயிலவிருந்த உரிமையை இழந்து. அவ்விடத்தில் கன்னடத்தைப் பயில விரும்பாத மொழிச் சிறுபான்மையோர், தாங்கள் ஏற்கனவே தாய்மொழியை முதல் பாடமாகவும், கட்டாயக் கன்னடத்தை இரண்டாம் பாடமாகவும் கற்க விருப்பம் தெரிவித்திருந்தும், தங்கள் மீது கன்னடத்தை முதல் பாட மொழியாகத் திணிக்கின்ற வன்செயலை எதிர்த்தும், அதையே கட்டாயக் கன்னடம் என்னும் அளவில் இரண்டாம்பாடமொழியாகப் படிப்பதற்கு ஆதரவு தெரிவித்தும் தங்கவயல் மாணவர்கள் ஒரு பேரணி நடத்த விரும்பினர். அதன்படி ஏற்கனவே அமைக்கப்

www.thamizham.net - Free E book No 7523

பட்டிருந்த அனைத்துக் கட்சியினர் அடங்கிய, கோகாக் குழு எதிர்ப்பு அணி, அனைத்துக் கட்சிகளின் மொழி அமைப்புகள், வணிகப் பெருமக்கள், ஆகிய அனைத்து அணியினரையும் கூட்டி, ஆய்ந்து, 5-7-82 ஆம் நாளன்று ஓர் அடையாளக் கடையடைப்பும், ஊர்வலமும் நடத்தி, இறுதியில் ஒரு கூட்டமாகக் கூடி நின்று, தங்கள் கருத்தை ஒரு தீர்மானமாக நிறைவேற்றி அரசுக்கு அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்தனர்.

அம் முடிவுப் படி, கடந்த 5-7-82 அன்று காலை 10 மணியளவில் கல்லூரி மாணவர்கள், தங்கவயல் உயர் நிலைப் பள்ளிகளின் மாணவர்கள், மற்றும், பொதுமக்கள் கலந்து கொண்ட ஊர்வலம் ஒன்று அமைதியாக நகரின் முகாமையான தெருக்களின் வழியாகச் சென்று பொதுக் கூட்ட மேடையை அடைந்தது. கருத்து விளக்கங்கள் முடிந்து, தீர்மானம் நிறைவேற்றும் கட்டம் வந்தது. அந் நிலையில், ஊர்வலமும், கடையடைப்பும் முழுமையாகவும் சிறப்பாகவும் அமைதியாகவும் நடந்து முடிந்ததைக் கண்டு, பொறுத்துக் கொள்ள முடியாத கன்னடக் காவலர்கள், தீர்மானத்தை அமைதியாக நிறைவேற்ற முடியாமல், அங்கும் இங்கும் சலசலப்புகளை ஏற்படுத்தி, மாணவர்களைக் கலைந்து போகுமாறு செய்து, அவ்வாறு கலைந்து போகாத மாணவர்கள் மேல் தடியடி செய்தும், கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் கூட்டத்தினரைச் சிதர்ந்தோடும்படி செய்து, அரத்தம் சொட்டச் சொட்ட மாணவர்களை விரட்டி விரட்டி அடித்தனர்.

தடியடியால் காயம் பட்ட மாணவர்களும் பொதுமக்களும் இங்கும் அங்கும் ஓடி அங்கிருந்த குடியிருப்புப் பகுதிகளில் புதந்து, வீடுகளில் ஒளிந்து கொண்டனர். ஒளிந்து கொண்டவர்களைத் துரத்திச் சென்ற காவலர்கள் வீடுகளிற் புகுந்து அடித்தனர். தப்பியோடியவர்களைத் துமுக்கிகளால் சுட்டனர். மாணவர்களென்றும், சிறுவர்களென்றும் பெண்களென்றும் வேறுபாடின்றிக் காவலர்கள் அனைவரையும் காட்டு விலங்காண்டித் தனமாக அடித்து நொறுக்கினர்; சுட்டனர். இவ்வாறு தமிழர்களின் பகுதிகளில் மக்கள் வேட்டை, சூலை 5, 6, 7 ஆகிய மூன்று நாட்களும் தொடர்ந்து நடந்தது. நூற்றுக் கணக்கானோர் மருத்துவ மனைகளில் குற்றுயிரும், கொலையுயிருமாகச் சேர்க்கப்பட்டனர். இத் துமுக்கிச் சூட்டில் பத்துக்கும் மேற்பட்டோர் குண்டுகளுக்கு இரையாகி உயிர் துறந்தனர். (அரசுக் கணக்கு 2 என்று கூறுகிறது)

காவலர்களின் தொடர்ந்த கொடுமையான துன்புறுத்தலுக்கும், தடியடிக்கும், துமுக்கிச் சூட்டிற்கும் அஞ்சித் தங்கவயல் மாணவர்களும் இளைஞர்களும் கூட்டங் கூட்டமாகத் தம் இல்லங்களை விட்டு வெளியேறி வெளியூர்களுக்குத் தப்பி ஓடித் தஞ்சம் புகுந்துள்ளனர். இது நாள் வரையில் அச்சமின்றி வாழ்ந்து வந்த தங்கவயல் தமிழர்கள், இக்கால் நாள்தோறும் அஞ்சி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

www.thamizham.net - Free E book No 7523

தமிழர்கள் சுட்டுக் கொல்லப் படுவதை எதிர்த்தும், தமிழர்களுக்கு ஆதரவாகவும், அடிபட்டுச் சாகும் அவர்களைக் காப்பாற்றவும், தமிழகத்திலிருந்து உடனே குரல் எழாமற் போனது. அங்குள்ள தமிழர்களுக்குப் பெருத்த ஏமாற்றமாகப் போனது.

மொழிச் சிறுபான்மையோராகிய தங்கவயல் மக்கள் கன்னடத்தை எதிர்த்தும், அதைக் கற்க மறுத்தும் எழுந்த கிளர்ச்சி அன்று இது. கருநாடகத்தில் கன்னடத்திற்கு முதலிடம் அளிக்கப் பெற்று வளர்க்கப் பெறுவதிலும், அதனை அங்குள்ள தமிழர்களும் பிறமொழிச் சிறுபான்மையினரும் கற்றுக்கொள்வதிலும் அவர்களுக்கு எவ்வகைக் கருத்து மாற்றமும் இல்லை என்று தெரிய வருகின்றது. அங்கு வாழச் சென்ற தமிழரும் பிறரும் கன்னடத்தை வளர்ப்பதிலும், கற்பதிலும் ஆர்வமே காட்டுகின்றனர். அஃது அவர்களின் கடமை என்றும் கருதுகின்றனர். அதுவே நயமும் (நியாயமும்) ஆகும்.

ஆனால், அவர்கள் விரும்புவதெல்லாம், முதல் மொழியாகத் தங்களின் தாய்மொழியைக் கற்க வாய்ப்பளித்து விட்டு, இரண்டாம் மொழியாகக் கட்டாயக் கன்னடத்தைத் தங்களுக்குக் கற்பிப்பதை அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்பதே. (இந்த நடைமுறைதான் தமிழ் நாட்டிலும் கடைப் பிடிக்கப் பெறுகிறது. இங்குள்ள பிற மொழிச் சிறுபான்மையினர் அவர்களின் தாய்மொழியை முதற் பாட மொழியாகக் கற்றுக் கொள்ள விரும்பினால் இங்கு வாய்ப்பளிக்கப் பெறுகிறது.) தமிழ் நாட்டைப் போலும் மொழிச் சிறுபான்மையினர்க்கு அளிக்கப்படும் வாய்ப்பு, அங்குள்ள பிறமொழிக்காரர்களுக்கு, குறிப்பாகத் தமிழர்களுக்கு அளிக்கப்பட வில்லை என்பது தான் அவர்கள் குறை.

ஆனால் இங்குள்ள ஒருசிலர் (சில கட்சித் தலைவர்கள் உட்பட), 'தங்கவயலில் உள்ள மொழிச் சிறுபான்மையினர், குறிப்பாக அங்குள்ள தமிழர், கன்னடமொழி பயில்வதற்கு எதிர்ப்பேதும் தெரிவிக்கவில்லை' என்று உண்மையறியாமல் மேலோட்டமாகக் கூறி, அவர்களின் சிக்கலை மேலும் சிக்கலாக்குவதுடன், திசை திருப்பவும் செய்வது மிகவும் வருந்துவதற்குரியதும் இகழ்ச்சிக்குரியதும் ஆகும். கருநாடகத்தில், தங்கவயலில், மொழிச் சிறுபான்மையரிடம் இக்கால் நடக்கும் மொழிக்கிளர்ச்சி, கன்னட எதிர்ப்பு கிளர்ச்சி அன்று; ஆயினும், கன்னடத்தை முதல் மொழியாக அங்குள்ள மொழிச் சிறுபான்மையரும் படிக்க வேண்டும் என்பதை எதிர்ப்பதும், அவரவர்களின் தாய்மொழிகளையே முதல் மொழியாகப் படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதும் ஆகும் என்பதை அனைவரும் உணர்தல் வேண்டும்.

(இக்கட்டுரைக் கருத்துகளுக்கு விளக்கம் தந்தவர் :
ந. அல்பிறகாசு, கோலார் தங்கவயல்-4)

www.thamizham.net - Free E book No 7523

வெளிநாட்டுத் தமிழர் ஒருவர் வேண்டுகோள்!

# இரு கழகமும் ஒன்றிணைய வேண்டும்!

(கீழுள்ள உருக்கமான மடல், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர், திரு. இர. ந. வீரப்பன் அவர்கள், தமிழக முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் அவர்கட்கும், தமிழக முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதிக்கும் நேரிடையாக எழுதியது. அதன் படி (copy) ஒன்று தென்மொழிக்கும் வரப் பெற்றோம். இம் மடலில் கூறப் பெற்ற கருத்துகள் அயலகத் தமிழர் ஒருவரின் கருத்தாக அன்பர்கள் முன் வைக்கப் பெறுகின்றன. இதன் விளைவு பற்றி நாம் கவலைப் பட வேண்டா. இதன் வேண்டுகோள் உலகில் வாழும் தமிழர்களின் கருத்து என்ற அளவில் நாம் மதிக்கத் தக்கது.)

5.7.82
கிளாங், மலேசியா.

மடல் பெறுநர் :

**மக்கள் திலகம்,**
மாண்புத்திரு, தமிழர்
**எம். சி ஆர். அவர்கள்**

**தமிழவேள் கலைஞர்,**
மாண்புத்திரு, தமிழர்
**மு. கருணாநிதி அவர்கள்**

மாண்புடைய பெருமக்களே இருவர்க்கும் பணிவான வணக்கம்! நலம்! நலமே விளைக!

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா இருவரும் கூறியவிளக்கப் படியே நீங்கள் இருவருமே தமிழர்தாம்! இதில் எந்த வேறுபாடும் - மாறுபாடும் இல்லை.

ஒரு கோடி உலகத் தமிழர் சார்பில் உங்கள் இருவரையும் பணிவுடன் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்வது இதுதான்! 'யார் தமிழர்?' என்றபோராட்டம் வேண்டாம்! இன்றே இதனைக்கைவிட்டு விடுங்கள்! இந்தச் சிக்கலுக்கு உடனே இருவரும் ஆணையிட்டு — கட்டளை பிறப்பித்து விடவும். இதனால் வெளியுலகத் தமிழ்ப் பண்பாடு அழிகிறது! இங்கும் — எங்கும் தமிழர் வருந்தித் துன்புறுகின்றனர்.

இருவரும் அண்ணாவின் அடக்கமேடை முன் மெய்யுறுதி செய்து உடன் படுங்கள். இருவரும் "அரசியல் கலை"யில் வல்லவர்கள் — நல்லவர்கள். வறுமையைத் துடைத்தொழிக்கவும், சூழ்ச்சியர்களின் வஞ்சக(பாச)வலையில் வீழ்ந்து விடாமல் தமிழர்களைக் காப்பாற்றவும் உடனே இருவரும் திருந்துங்கள்.

எதிர்வரும் அண்ணா பிறந்தநாளில் இருவரும் தத்தம் உறுதுணைவர்களுடன், அண்ணா அடக்கமேடையில் (சமாதியில்) இந்த முடிவை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

**தமிழர் முன்னேற்றக் கழகம்.**
**(அ) அண்ணா தமிழர் முன்னேற்றக் கழகம்.**

எனவே, அன்று இந்தப் பெயரைச் சூட்டுங்கள். திராவிடர் என்ற சொல்லை நீக்கி விடுங்கள்! இரு கழகங்களையும் தனித்தமிழர் கழகங்களாகப் படிப்படியாக மாற்றுங்கள்! ஓராண்டாக இதனை உறுதிப்

www.thamizham.net - Free E book No 7523

# 'நாய்களின் வால்களை ✓ நிமிர்த்தவே முடியாதா?

பெருமதிப்பிற்கும் பேரன்பிற்குமுரிய பாவலரேறு ஐயா, அவர்கட்கு வணக்கம். இருப்பதும் விழைவதும் நலமே.

இம் மடலுடன் துண்டறிக்கையொன்று இணைத்துள்ளேன். அண்மையில், 'ராமானுஜ ஜீயர்' என்பாரொருவர் வேலூர்க்கு வந்திருந்த பொழுது நன்கொடையளித்த தமிழர்கட்கு வழங்கிய அறிக்கை அது. நம் நண்பரொருவர் 'என்னய்யா? நீங்களும் தமிழை வளர்க்கின்றீர்களே! இதோ பாருங்கள்; தமிழ் எவ்வளவு அருமையாக உள்ளது!' எனச் சிரித்தவாறே இதை எனக்களித்தார். படித்துப் பார்த்தேன்; பதறித் துடித்தேன். அரத்தம் கொதித்தது. மேலிருந்து இறுதிவரை வடமொழி கலந்த அருவருப்பான தமிழ்!

மொழித் தூய்மைக்காகவே தம் வாழ்வை ஈகம் செய்துள்ள தங்களின் கவனத்திற்கு இம்மடலைக் கொணரல் இன்றியமையாதது எனக்கருதியே இதனை அனுப்புகிறேன்.

ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா பா. வே. மாணிக்கனார் மறைமலையடிகள், பாவாணர்,

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

படுத்தி 1983-இல் அண்ணா பிறந்த அதே நாளில் இரண்டையும் ஒன்றாக இணைத்து விடுங்கள். இரண்டும் ஒரு செடியில் இருமலர்கள்! அண்ணாவின் இரு கண்கள்! இரண்டும் ஓரணியில் சீரணியாக ஒன்றுபட வேண்டும் என்றே உலகத் தமிழர்கள் கனவு கண்டு வருகிறார்கள்!

இவ்வேண்டுகோளை, அன்பு கூர்ந்து வெளியிட வேண்டுகிறேன். வெளியிடாமற்போனால் உரியவேளையில் இக் கடிதம் வெளியிட வேண்டிய நிலை ஏற்படும். நாங்கள் இதனை அச்சிட்டு வெளியிட வேண்டிய நிலை வராது என்றே நம்புகிறோம்!

தமிழகத்திற்கு வெளியே இருவருக்கும் நல்ல புகழும் பெருமையும் சிறப்பும் உள்ளன. இந்தப் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் எனப் பணிவுடன் வேண்டுகிறோம். பலரின் விருப்பத்தைக் கடிதமாகவே எழுதுகின்றேன்.

திராவிடர் என்ற பெயர் என்று கழகங்களுக்கு வந்ததோ அன்றே, வெளிநாட்டுத் தமிழர்களும் அதன் எதிர் விளைவால் (பிரதி பலிப்பால்) அழிகின்றனர். ஏமாற்றப்படுகின்றனர்.

யார் தமிழன் — நீயா, நானா என்ற தருக்கம்(வாதம்)முடிவுக்கு வரா விட்டால், திராவிடர் என்ற பெயர் மாற்றப் படா விட்டால், இரு கழகமும் இணையா விட்டால், உங்களிருவரையுமே தமிழர் இல்லை என்று தமிழுலகம் விரைவில் முடிவு செய்து விடும்! நன்றி!

உங்கள் பணிவுள்ள, (ஒப்பம்.)

தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைமையகம்.

www.thamizham.net - Free E book No 7523

பாவேந்தர் போன்ரோர் அரிதின் முயன்றும் வடமொழியின் வல்லாண்மையினின்றும் அன்னைத் தமிழை முழுதாக மீட்க இயலவில்லையே! என எண்ணும் பொழுது ஏக்கம் மேலிடுகிறது. மொழிக் கொலை செய்துவரும் அந்த 'நாய்களின் வால்'களை நிமிர்த்தவே முடியாதா? என எண்ணத் தோன்றுகின்றது

அருள்கூர்ந்து, இம் மடலினையும், அறிக்கையையும் நம் தென்மொழியில் வெளியிட்டு நம் உணர்வுள்ள அனைத்து அன்பர்களும் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுகிறேன்.

நன்றி வணக்கம். அன்பன். (பாவலர். நிறைவாணன், வேலூர்)

ஸ்ரீ ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

(திருமாலிய இலச்சினைகள்)

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யோபய வேதாந்த பிரதிஷ்டாபனுசார்யராய் ஸ்ரீமத்ரம்யஜமாத்ரு யதிவரக்ருபாலப்த ஸ்ரீவரமங்கா ஸமேத ஸ்ரீதேவநாயகாந்தரங்க கைங்கர்யைக துரந்தரராய், அகண்டமஹீ மண்டலாலங்கார மஹீபால கோடீர கோடி கடித மணி கிரண படல பாடலித பாத பீட பர்யந்தாசாரியராய், பரம புருஷார்த்த லக்ஷண விலக்ஷண மோக்ஷைக பிரயோஜனார்த்த பஞ்சக ஞானைக ஸாதன, ஸ்ரீமத் அஷ்டாக்ஷராதி ரஹஸ்யத்ரய, ஜகதுஜ்ஜீவனுசார்யராய் ஸகல முனிஜன மானஸாரவிந்த ஸந்தோஹ ஸமுல்லாஸ ஸமுல்லஸி த ஸ்ரீராஜஹம்ஸாவதாரராய், ஸ்ரீபகவத் ராமானுஜஸித்தாந்த நிர்த்தாரகாசார்ய ஸார்வபௌமராய் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரராய், எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வானமாமலை ராமாநுஜஜீயர்.

ஸகல ஸத்குண ஸம்பந்தர்களாயும், ஸ்ரீ பகவத் பாகவதாசார்ய கைங்கர்ய நித்ய நிரந்தரர்களாயும் நம்முடைய மடம் அரங்க நகரப்பன் ஸந்நிதிக்கு முக்யாந்தரங்க ஸிஷ்யர்களாயுமிருக்கிற-அத்யந்த பரமாப்தர்களாயுமிருக்கிற நம்முடைய ..............க்கு ஸ்வரூபாநுரூபம் க்ரியமாணம் மங்களா சாஸனம், இவ்விடம் திருவள்ளூரில் நம்முடைய மடம் அரங்கநகரப்பன் ஸந்நிதி நித்ய ததீயாராதன உபய வேதாந்த காலக்ஷேபாதிகள் அவிச்சின்னமாய் நடந்து வருகின்றன. அவ்விடம் உங்களுடைய ஸுபயோக க்ஷேமாதிசயங்களுக்கு அடிக்கடியெழுதி அனுப்பிக் கொண்டிருக்க வேண்டும்.

இப்பவும் நாம் சிஷ்ய யாத்திரையாகப் புறப்பட்டு வருவதில் இவ்விடம் திருவள்ளூரில் வந்து சேர்ந்திருக்கிறோம். இவ்விடமிருந்து புறப்பட்டு அவ்விடம் வேலூர் வந்து சேர வேண்டுமென்று நிச்சயித்திருக்கிறோம். நம்முடைய மடம் அரங்கநகரப்பனை வந்து சேவித்து அவனுடைய பேரருளுக்குப் பாத்திரமாக வேண்டும். அவ்விடத்தில் எல்லாருக்கும் நம்முடைய மங்களாசாஸனத்தைத் தெரிவிக்க வேண்டும். அநேக மங்களா சாஸனம், (ஒப்பம்).

www.thamizham.net - Free E book No 7523

கொடுமைப் படுத்தப் படுகிறான். இவ்வளவு துன்பங்களுக்கு இடையில் தமிழன் எப்படிப் படைத்துறையில் பணியாற்ற முடியும்? பிறகு படைத் துறையில் தமிழர் எண்ணிக்கை எப்படிப் பெருகும்? தேசியம் பேசும் நமது உடன் பிறப்புகள் இந்த இளித்தவாய்த் தனத்தை உணர வேண்டும். தங்களின் அயராத உழைப்பால் தமிழும் தமிழினமும் தன்னிலை உணருமா ? தங்களுக்கு நீண்ட வாழ் நாளையும் உற்ற துணைவர்களையும் அளிக்க வேண்டிக் கொள்ளும், இந்தியப் படை வீரன்,

— **கா. சு. ஆறுமுகம்,** சிகந்தராபாத்-10.

*0 : 939 :* ஐயாவுக்கு, வணக்கம். இம்மாத இதழ்கள் வந்தன; உள்ள வருத்தம் புலப்பட்டது; எளியேனால் இயன்றதை எழுது கிறேன். பழிதூற்றும் கூட்டத்திற்கு அஞ்ச வேண்டாம். எங்குமே இன்னல்கள் தாம் மிகுதி. இருப்பினும் உ. த. மு. க. இயக்கத்தை வலிவுறச் செய்யுங்கள். எம்மால் இயன்ற அளவு உறுப்பினர்களைச் சேர்த்துதவுகிறேன். புகழுக்குத் தொடர்பானவற்றையே எழுதுங்கள்.

இயக்கப் பெயர் பரவவே சில ஆண்டுகள் பிடிக்கும். கொள்கை விளக்கத்திற்கு மேலும் ஓரிரண்டு ஆண்டுகள் செல்லும். அமைப்புகள் தொடங்கி நம் இதழ்கள் பரவினால்தான் இயக்கம் பரவத் தொடங்கும். என்னால் இயன்ற அளவு உ. த. மு. க. மாநாடு தொடக்கத்தில் இருந்து தென்மொழியைப்பலருக்கும் படிக்கக் கொடுத்து வருகிறேன். பல கற்கள் தொலைவிற்கு அப்பால் சில உறுப்பினர்களைச் சேரச் சொல்கிறேன். பொருள் நிலையால் வலுத்தவர்கள் அரசியல் நடத்தும் இந் நாளில் நாம் தலைதூக்குவது எளிதானதன்று; எனினும் முயற்சி திருவினையாக்கும்.

"முற்றும் செந்தமிழ் மொழிக்குள் அடக்கம்!
வாயுரை அன்று வாய்மை உரையிது"

ஐயா — மெய்யாகவே தாங்கள் பெருஞ்சித்திரனார்தாம். தங்களின் முயற்சி வெல்லும். அன்பு.

— **கி. நா. செந்தமிழ்ச்செல்வன்,** வேங்கைவாடி.

*0 : 940 :* நெஞ்சம் நிறைந்த பாவலரேறு ஐயா அவர்கட்கு அன்பு வணக்கங்கள். கடந்த திங்கள் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடந்த அறிவியற் சொல்லாக்கக் கருத்தரங்கில் மார்க்சிய அறிஞர் பேராசிரியர் **பர். கா. சிவத்தம்பி** முதன் முதலாகத் தாங்களைக் கண்டது பற்றியும், உரையாடியது பற்றியும், இங்கு (அண்ணாமலை நகர்) வந்த போது குறிப்பிட்டார். தாங்களைப் பலர் பலவாறாகக் கூறிய செய்திகளின் படியே தாங்களை அவர் நினைத்துக் கொண்டிருந்ததாகவும். நேரில் கண்டு பேசிய பின், உண்மை வேறாக இருந்ததாகவும் கூறிய அவ் அறிஞர், தங்களின்பால் மிக மதிப்புக் கொண்டமையை மனம் மகிழ்ந்து தெரிவித்தார். மக்கள் நலன் நாடும் அறிஞர்களும் பிறரும் தாங்களின் தூய பேரறிவையும் தொண்டினையும் மதிக்கத் தொடங்கினர் என்பதாகவே இந் நிகழ்ச்சி என்னுள் தோன்றிற்று.

தமிழும் தமிழினமும் தில்லு முல்லுத் திருடர்களின் பொய்யாலும் புரட்டாலும் அலைக்கழிக்கப் படுவதை உ. த மு. க வழி மாற்றியமைக்க உறுதி கொண்ட தாங்களை இம் மடல் வழி வணங்குகின்றேன்.

— **கு இராசேந்திரன். க.மு. அண்ணாமலைநகர்.**

*0 941 :* பெருந்தகை ஐயா அவர்களுக்கு ! வணக்கம். நான் அந்தமான் இரங்கத்திலிருந்து (திருச்சி மாவட்டம்) ...

www.thamizham.net - Free E-book No.7523

வாழும் தமிழர்களைப் பற்றியும், அங்குத் தமிழ் மொழிக் கல்வி வாய்ப்புச் செய்து தருவதில் அந்தமான் அரசு எங்களுக்கு இழைக்கும் தீங்குகளையும் சற்றுவிளக்கி விட்டு, இன்றைய தமிழக அரசு அந்தமான் தமிழர்களுக்கு வேண்டிய நயன்மை கிடைக்க வேண்டுமென்று நடுவண், இந்திய அரசுக்கு வலியுறுத்தச்செய்ய வேண்டியவாறு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுகிறேன். (மாநாட்டில் அது பற்றி எடுத்துரைக்கப் பெற்றது.)

1. மேற்கு வாங்காள அரசு தங்கள் மொழிப் பாடப் பொத்தகங்களை அங்குள்ள மாணவர்களுக்கு இலவயமாகத் தருவது போன்று தமிழ்ப் பாடப் பொத்தகங்கள் தமிழக அரசும் தர வேண்டும்.

2. பொறிபியல், மருத்துவ மேற்படிப்பிற்குக் கேரள அரசு அங்கு உள்ள மலையாள மாணவர்களுக்கெனத் தனியாக இடங்கள் ஒதுக்கிக் கொடுப்பது போன்று தமிழக அரசும் தமிழின மக்களுக்குத் தர வேண்டும்.

3. புதிதாகத் தமிழ்ப்பாட மொழிப் பள்ளிகளைத்திறப்பதற்கு இசைவு தருவதில் ஓரவஞ்சனை காட்டி மறுப்பதனைத் தமிழக அரசு நடுவண் அரசுக்கு எழுதி ஆவன செய்ய வேண்டும்.

ஆவன செய்யத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இங்ஙனம்
—**வீர. இராசமணி**, உடற்பயிற்சி ஆசிரியர், இரங்கத், அந்தமான்.

*0 : 942* : அன்புள்ள தென்மொழியார் அவர்களுக்கு, வணக்கம், 1982 ஏப்பிரல் - மே இதழில் இம்மாதச் சிறப்பு மடலாக வெளியிடப் பட்டிருந்த 'அண்ணா விழுந்த சதுப்புக் குழியில் விழாதீர்கள்!' என்ற மடலைப்படித்தேன்.படித்த உடனே இந்த மடலை எழுதவேண்டுமென்ற உந்துதல் என் மனதில் ஏற்பட்டதால் இதை எழுதுகிறேன்.

தென்மொழியின் வளர்ச்சியில் நானும் என்னைப் போன்றவர்களும் அக்கறை உள்ளவர்களே. ஏனென்றால் தென்மொழியின் தொண்டும் தங்கள் தொண்டும் தமிழகத்திற்குத் தேவை என்று கருதுகிறோம்.அதே நேரத்தில் தங்களைப்போன்றும் தென்மொழியைப் போன்றும் பன்மடங்கு,தமிழகத்திற்குத் தொண்டுசெய்த தந்தை பெரியார் அவர்களையோ பேரறிஞர் அண்ணா அவர்களையோ இழிவு படுத்தி வக்கணை பேசுவதை நாங்கள் சிறிதும் விரும்பவில்லை. அவர்களைப் பற்றி நேரடியாகவோ, மறைமுகமாவோ, மடல் மூலமாகவோ, ஆசிரியவுரையாகவோ தரக் குறைவாக எழுதுவது அறவே தேவையற்ற ஒன்று என்று நினைக்கிறேன்.

தமிழ் உணர்ச்சிக்கு வித்திட்ட பெரியவர்களை நீங்களும் அவமதிப்பது—சங்கராச்சாரியும் அவமதிப்பது என்றால் அதற்கு என்ன பொருள்? கருத்துகளை மறுப்பது வேறு; மாந்தர்களை அவமதிப்பது வேறு. கருத்துகளை மறுக்கும்போது மாந்தர்களை அவமதிப்பது நாகரிகந்தானா? கருத்துகளை முறையாக மறுப்பதைப் பகுத்தறிவாளர்கள் எப்போதும் வரவேற்பார்கள்.

உங்கள் வல்லமையை நீங்கள் மிகுத்து மதிப்பிட்டுக் கொள்ளுவது உங்கள் வளர்ச்சிக்குத் துணை செய்யாது. தந்தை பெரியார் வழி

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம் பார்க்க)

www.thamizham.net - Free E-book No 7523